# தமிழ்க்கலை தொழில் நுட்பக்கல்லூரி

# ACADEMY OF TAMIL ARTS AND TECHNOLOGY

## 6 வது ஆண்டு மலர்



2163 LAWRENCE AVE. E. SUITE "B" MIP-2P5

# தமிழ்க்கலை—தொழில்நுட்பக் கல்லூரி

## கல்லூரிக் கீதம்

வாழிய உலகத் தமிழர் கல்லூரி
வாழிய வாழிய வாழியவே
வளமார் தமிழும் கவின்கலை தொழில்நுட்பம்
தமிழினம் பெறவே வாழியவே

உலகத் தமிழினம் ஒன்றுபடவும்
ஒற்றுமை பெறவும் வாழியவே
நலமாய் நம்மினம் தமிழீழம் நயந்தே
சுதந்திர வாழ்வில் வாழியவே

கனடாத் தமிழர் பல்கலை பெற்றே
ஒன்றாய் வளர்வோம் வாழியவே
இனமாய் அன்னை மொழியில் வளர்வோம்
நன்றாய் உலகில் வாழியவே

யாதும் ஊரே யாவரும் கேளிர்
என்பதெம் இலக்கு வாழியவே
ஓதும் கலைகளில் உயர்ந்தே ஓங்கி
இன்பமாய்த் தமிழர் வாழியவே

வெளியீடு
தமிழ்க்கலை—தொழில்நுட்பக் கல்லூரி

Published by
The Academy of Tamil Arts & Technology

2163 Lawrence Avenue East, Suite B, Sacrborough, Ontario, M1P 2P5 Tel: (416) 757-9601

# 6வது ஆண்டு விழா மலர்
## யூன் 1998

# 6th Anniversary Vizha Malar
## June 1998

தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி

ACADEMY OF TAMIL ARTS & TECHNOLOGY


2163 லோறன்ஸ் அவென்யூ கிழக்கு
அறைத் தொகுதி B
ஸ்காபறோ
ஒன்றாரியோ M1P 2P5
தொ.பே. (416) 757-9601
தொ.ந. (416) 757-2006

2163 Lawrence Ave. E.
Suite B
Scarborough
Ontario, M1P 2P5
Tel: (416) 757-9601
Fax: (416) 757-2006

E-Mail: academy@atat.org
Website: www.atat.org



**OAC** வகுப்பில் தமிழ்மொழியினைக் கற்கும் மாணவர்களும் ஆசிரியர் திரு. ம. செ. அலெக்ஸ்சாந்தரும் திரு. சு. இராஜரத்தினமும்.



**OAC** வகுப்பில் தமிழ்மொழியினைக் கற்கும் மாணவர்களும் ஆசிரியர் திரு. க. செபரத்தினமும்

உலகத் தமிழர் இயக்கம்
World Tamil Movement (Ontario)
L'ASSOCIATION MONDIALE TAMOULE (ONTARIO)
64 EATON AVENUE, TORONTO, ONTARIO M4J 2Z5 CANADA
REG. 677800 TEL.(416) 461-599

கல்விச்சேவைக்கான எமது உபஅமைப்பாம் தமிழ்க்கலைத் தொழில்நுட்பக் கல்லூரி, ஆறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு எமது மகிழ்ச்சியினையும், பாராட்டுதலையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அந்நிய ஆக்கிரமிப்பாளனின் வன்செயல்களினால் தாய் மண்ணில் அல்லற்படும் எமது உடன் பிறந்தோருக்கு எம்மாலான உதவிகளைச் செய்யும் அதேவேளை புலம் பெயர்ந்து குடியேறிய இந்நாட்டிலும், எம்மக்கள் சிறப்போடு சிறந்த பிரசைகளாக வாழ எம்மாலானவற்றை செய்வதே எமது குறிக்கோளாகும்.

மேற்கூறிய அடிப்படையில் எம்மக்களின் சகல பிரிவினரின் தேவைகளையும் இயன்றவரை நிறைவேற்றும் பொருட்டு மகளிர் அமைப்பு, மாணவர் அமைப்பு, செஞ்சோலை, கலைபண்பாட்டுக் கழகம், குடிவரவு குடியமர்வுச் சேவை, மக்கள் தகவல்களை அறியும் பொருட்டு பத்திரிகை - ஒலிபரப்புச்சேவை, கல்விச்சேவை ஆகியவற்றுக்கான தனித்தனி உப அமைப்புக்களை எமது இயக்கம் கொண்டுள்ளது.

எமது பிள்ளைகள் தமிழர் தம் மொழி, கலை என்பனவற்றுடன் இந்நாட்டில் தமது தொழிற்கல்வியிலும் சிறந்து விளங்கக் கூடியதாகவும் தொழிற்துறையில் அறிவும், அனுபவமும் கொண்ட எம்மவர்கள் மின்கணனி யுகத்தில் ஒன்றிணைந்து தமது அறிவைப் பயன்படுத்தக் கூடிய வகையிலும் தற்போது எமது கல்விச்சேவை நிறுவனமாகிய தமிழ்க்கலைத் தொழில்நுட்பக் கல்லூரி செயற்பட்டு வருகின்றது.

எமது இக்கல்விச் சேவை அமைப்பில் தொண்டர்களாக சேவையாற்றும் சகலருக்கும் உலகத்தமிழர் இயக்கம் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது. கல்லூரியானது மேலும் வளர்ந்து எமது இலக்கை அடைய முன்நின்று உழைக்கும் சகலருக்கும் எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை கல்லூரியின் ஆறாவது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற எமது நல்லாசிகள்.

நன்றி! வணக்கம்!

உலகத்தமிழர் இயக்கம்.



கல்லூரியில் சேவையாற்றும் தொண்டர்கள்

## இருப்பவர்கள்:-

முன்வரிசை.

பவானி இராசரத்தினம், கிருபாநிதி இரத்தினேஸ்வரன், விஜயலட்சுமி பூபாலசிங்கம், சுகந்தி சிவபரமானந்தா, சிவசோதி தெய்வேந்திரம், பொன்மலர் திருஞானம், பிரேமாவதி சிறிஸ்கந்தராசா, ஜெயமணி சிவராம், சரஸ்வதி சின்னத்தம்பி, தவமலர் சிவானந்தன்.

பின்வரிசை.

நிரோதினி பரராசசிங்கம், விஜயலட்சுமி சீனிவாசகம், நாகேந்திரன் சடையர், கந்தசாமி வல்லிபுரம், சந்நிதிவேல் செல்வத்துரை, இராசரத்தினம் சுப்பிரமணியம், இராஜ்குமார் சோமநாதன், அலெக்ஸ்சாந்தர் மனுவேற்பிள்ளை, மகேஸ்வரி கனகலிங்கம், இரத்தினசெவ்வந்தி ஜெயகாந்தன்.

## நிற்பவர்கள்:-

முன்வரிசை.

பிரபாலினி குணரத்தினம், மேனகா அம்பிகைபாகன், கமலினி அருட்சோதி, சுகந்தி பாலஸ்கந்தா, குகவதி மாணிக்கவாசகர், சரோஜா சண்முகம், ஐறீன் கோபன், தியாகேஸ்வரி மகேந்திரன், சரோஜினி வேலாயுதம்பிள்ளை, சைராபானு யோகானந்தசாமி.

பின்வரிசை.


திருநாவுக்கரசு கந்தசாமி, தயாளன் மருதப்பு, மோகன் இராமகிருஸ்ணன், கிருஸ்ணமூர்த்தி இரத்தினசபாபதி, மோகேந்திரன் திருநாவுக்கரசு, பெனடிக்ற் பேதுருப்பிள்ளை, பட்டன் அழகர்சாமி, யுவராஜன் இராஜசுந்தரம், கணேசதாசன் ஈஸ்வரம்பிள்ளை, வரதராஜன் துரைசிங்கம்.

எமது கல்லூரி இலாப நோக்கற்ற ஒரு சமூகசேவை அமைப்பாகும். இக்கல்லூரியில் கல்வி கற்போர் செலுத்தும் கட்டணங்கள்மூலம் இலாபம் கிடைக்கப்பெறின், அப்பணம் மீண்டும் எமது சமூகசேவைக்கே பயன்படுத்தப் படுகிறது. எனவே இங்கு கல்வி கற்பதன் மூலம் தமிழினத்துக்கான ஓர் அமைப்பை வலுப்படுத்துவதுடன், எமது இன வளர்ச்சிக்கும் பங்கு அளிக்கின்றீர்கள்.

-சேவையாளர்கள்



ஆசிரியர்கள் திருமதி. ம. தனபாலசிங்கம், திருமதி. ச. சின்னத்தம்பி ஆகியோருடன் வின்ஸ்ரன் சேர்ச்சில் கல்லூரியில் தமிழ் பயிலும் மேற்பிரிவு (உயர்தர) மாணவர்கள்



ஆசிரியர் திருமதி. இ. ஜெயகாந்தனுடன் வின்ஸ்ரன் சேர்ச்சில் கல்லூரியில் தமிழ் பயிலும் மேற் பிரிவு மாணவர்கள்

# கல்லூரி பற்றிய தகவல்

## கல்லூரியின் நோக்கம்:

- தமிழர்தம் மொழி, கலை, பண்பாடு கனடாவில் வளர்ச்சி அடைவதற்குரிய ஆக்கபூர்வமான வழிவகைகளை வகுத்துச் செயற்படல்.

- எமது மொழி, கலை, பண்பாடு மற்றும் பாரம்பரிய விழுமியங்களை இளஞ்சந்ததியினர் நன்குணர்ந்து அவற்றினைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு அறிவூட்டுதல்

- சமூக கலாச்சார நிகழ்ச்சிகளை ஊக்குவித்து, எமது கலாச்சாரத் தனித்துவத்தைப் பேணும் அதேவேளையில் கனேடிய பல்லின கலாச்சார மக்களோடு இணைந்து வாழக்கூடிய பண்பினை மேம்படுத்தல்.

- கனடாவின் தொழிற்துறை வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் தொழில் நுட்பப் பயிற்சி வகுப்புக்களை நடத்தி கனேடிய பொருளாதார மேம்பாட்டுக்கு ஏற்ப மக்களின் தொழில் வளத்தினை ஊக்குவித்தல்.


- மாணவர்களின் எதிர்காலம் வளம்மிக்கதாக அமைய, அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஏற்ற வழிவகைகளை வகுத்து நடைமுறைப் படுத்தல்.

- தமிழர்தம் வரலாறு, மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களைப் பேணவும் மக்கள் இவற்றை அறிந்து கொள்ளவும் வழிவகுக்கும் முறையில் ஆவணங்களைக் கொண்ட ஒரு வரலாற்று நிலையத்தை அமைத்தல்.

- கனடாவாழ் தமிழர்கள் தமது தாயகத்துடனும், உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுடனும் தமது மொழி, கலை, பண்பாடு தொழில்நுட்பங்களைப் பரிமாறிக் கொள்வதற்கான ஓர் அமைப்பாகச் செயற்படல்.



வெலஸ்லி & பார்ளிமென்ரில் கல்வி கற்கும் தமிழ்மொழி மேற்பிரிவு மாணவர்களுடன் ஆசிரியர் திருமதி. சைராபானு யோகானந்தசாமி



வெலஸ்லி & பார்ளிமென்ரில் கல்வி கற்கும் தமிழ்மொழி மத்திய பிரிவு மாணவர்களுடன் ஆசிரியர் திருமதி. சுகந்தி சிவபரமானந்தா

## வரலாறு:

- ❋ எமது கல்லூரி உலகத்தமிழர் இயக்கத்தின் கல்விச் சேவைக்கான ஓர் உப அமைப்பு ஆகும்.
- ❋ 1990ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 மின்கணணிகளுடன் தனது பணியை ஆரம்பித்தது.
- ❋ எமது கல்லூரி உலகத் தமிழர் இயக்கத்தின் இலாப நோக்கற்ற கல்விச் சேவை அமைப்பாக 1993 யூலை மாதம் 18ம் திகதி பதிவு செய்யப்பட்டது.
- ❋ ரொறன்ரோ, ஸ்காபரோ, மிசிசாகா ஆகிய இடங்களில் 1993ம் ஆண்டு யூலை மாதம் வரை மின்கணணி வகுப்புகளை மாத்திரம் நடத்தி வந்த கல்லூரி, 93 யூலை முதல் தமிழ்மொழி, கவின்கலை, பாடசாலை மாணவர்களுக்கான கல்விச்சேவை, தொழிற் பயிற்சி, போன்ற துறைகளை ஆரம்பித்தது.
- ❋ கல்லூரி தனக்கென தலைமைப் பணி மனையை 16 செப்ரெம்பர் 1996ல் ஆரம்பித்தது. இப்பணிமனை 14 ஒக்டோபர் 96ல் திரு. பழ. நெடுமாறன் அவர்களால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.
- ❋ இன்று எமது கல்லூரியின் நடவடிக்கைகள் பின்வரும் இடங்களில் நடைபெறுகின்றன.


தலைமை அலுவலகம்
☞2163 Lawrence Ave. E.
Suite B, Scarborough
(Birchmount/Lawrence)

☞2130 Lawrence Ave. E.
Suite 204, Scarborough
(Birchmount/Lawrence)

☞1212 Bloor St. West
Toronto, Ontario
(Bloor/Lansdowne)

☞Winston Churchill Collegiate
2239 Lawrence Ave. E.
Scarborough
(Kennedy/Lawrence)


☞Rose Ave. C.R.C
Wellesley/Parliament

☞2357 Finch Ave. West
Weston/Finch

Tel: *(416) 757- 9601* Fax: *(416) 757-2006*
Website: *WWW. ATAT. ORG*



**OAC** வகுப்பில் தமிழ்மொழியினைக் கற்கும் மாணவர்களும் ஆசிரியர் திரு. பே. பெனடிக்ற்றும்



**OAC** வகுப்பில் தமிழ்மொழியினைக் கற்கும் மாணவர்களுடன் ஆசிரியர் திருமதி. ஷோபனா லோறன்ஸ்

## பணிகள்:

### தமிழ்மொழித் துறை

- தமிழ்மொழியைப் பேசவோ, எழுதவோ முடியாதவர்கள் முதற்கொண்டு தமிழ்மொழியில் நன்கு தேர்ச்சி உள்ளவர்கள் வரை பல தரப்பட்ட வயதினருக்கும், ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக்கழக புதுமுகத் திறமைச் சித்தி வகுப்பு வரை நடத்தப்படுகின்றது.

- தமிழ்மொழியில் சிறந்த அறிவினை மாணவர்கள் பெறும் பொருட்டு அவர்களை ஊக்கப் படுத்தவும், சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கென தனிப்பட்ட தரமுடைய வகுப்புக்களை நடத்தும் நோக்கோடும் தமிழ்மொழித்திறன் தேர்வினை நடத்தல்.

### கவின்கலைத் துறை

- பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம், பியானோ கீபோட் முதலான இசை நடன வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

- கலைத்துறையில் மாணவர்கள் ஆர்வத்துடன் ஈடுபடவும், உரிய பாடத்திட்டங்களையே கற்பதையும் ஊக்கப்படுத்தும் நோக்கோடு எம்மால் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.

### மின்கணணித் துறை

- மின்கணணி பற்றிய எவ்வித முன் அறிவு அற்றவர்கள் முதற் கொண்டு, மின்கணணித் துறையில் தொழில் புரிவோர் வரை தமது மின்கணணி பற்றிய அறிவினை வளர்த்துக் கொள்ளக் கூடியவகையில் பல தரப்பட்ட வகுப்புக்களும் நடத்தப்படுகின்றன.

### தொழிற்துறை

- தொழில்சார் திறமைகளை அபிவிருத்தி செய்யக் கூடிய பயிற்சி வகுப்புக்களை நடத்துதல்.

### மாணவர்களுக்கான கல்விச்சேவை

- பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தமது கல்லூரிகளில் சிறந்து விளங்கக் கூடிய வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

### தகவற் சேவை

- எமது இனம் பயன் அடையும் வகையில் தமிழர் வரலாறு மற்றும் அவர்கள்தம் மொழி, கலை, பற்றிய தகவல்கள் அடங்கிய மூலவளநிலையம் ஒன்றினை அமைத்தல்.



ஆசிரியர் திருமதி. ஜெ. சிவராமுடன் வின்ஸ்ரன் சேர்ச்சில் கல்லூரியில் தமிழ் கற்கும் மத்திய பிரிவு மாணவர்கள்



வின்ஸ்ரன் சேர்ச்சில் கல்லூரியில் தமிழ் பயிலும் கீழ்ப் பிரிவு மாணவர்களுடன் ஆசிரியர்கள் திருமதி. ஜோ. கெங்காமூர்த்தி, திருமதி. இ. ஸ்ரீஜெயலிங்கம்

# கல்லூரிப் பொறுப்பாளர் சில வார்த்தைகள் உங்களோடு...

உலகத்தமிழர் இயக்கத்தின் கல்விச்சேவை அமைப்பாகிய எமது கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு எட்டு வருடங்கள் பூர்த்தி அடைந்து விட்டன. கல்விச் சேவை அமைப்பாக எமது கல்லூரி அரசில் பதிவு செய்யப்பட்டு ஆறாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது.

ஓர் இனத்தின் பெருமையில் முக்கிய பங்கு வகிப்பது அந்த இனத்தின் கலை பண்பாட்டுக் கோலங்களும், அந்த மக்கள் தொழில்துறையில், விஞ்ஞான, அறிவியல் துறையில் எவ்வாறு மேம்பட்டு விளங்குகின்றனர் என்பதும் ஆகும். இவ்விடயங்களில் கனடா வாழ் தமிழினம் சிறந்து விளங்க தமிழினத்திற்கென் ஒரு கல்லூரி வேண்டும். இந்த இலக்கினை அடையும் நோக்கோடும் எமது கல்லூரி நடைபோட்டு வருகின்றது.

அத்துடன் தாயகத்திலும், உலகம் முழுவதிலும் பரந்து வாழும் தமிழினத்துடன் கலாச்சார கல்வி பரிவர்த்தனை செய்து கொள்வதற்கு இந்த நாட்டில் ஒரு அமைப்புத் தேவை என்பதை உணர்ந்து செயல்படுவது எமது கடமையாகும். கனடா வாழ் தமிழினத்தின் மேற்கூறிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கோடு தமது பெறுமதி மிக்க நேரத்தினை அர்ப்பணம் செய்து வரும் ஆசிரியர்கள் தொண்டர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் பலரும் கல்லூரியின் சேவையினையும், தேவையினையும் நன்குணர்ந்து தமது ஓய்வு நேரங்களில் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தம்மாலான சேவையினைச் செய்து வருகின்றார்கள். இந்த மாணவமணிகளுக்கு எமது நன்றி கலந்த பாராட்டுக்கள். எமது ஆறாவது ஆண்டுமலருடன் இவ்வருடம் பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைக்குத் தமிழ்மொழியினை ஒரு பாடமாகப் பயின்ற எமது மாணவர்கள் சிலரின் ஆக்கங்களைத் தாங்கி மாணவமணி வெளிவருகின்றது. மாணவமணிக்கென ஆக்கங்களைத் தந்த சகல மாணவர்களுடைய படைப்புகளையும் இம்மலரின் சுருக்கம் கருதி வெளியிட முடியாது போனமைக்கு மனம்வருந்துகிறோம்.

எமது இனத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு தமது அறிவினையும், உழைப்பினையும் முதலீடு செய்துவரும் சேவையாளர்கள் எதிர்பார்ப்பது ஆரோக்கியமான வளர்ச்சி கொண்ட சமுதாயம் ஆகும்.

பல்லினக் கலாச்சாரம் கொண்ட இந்நாட்டில் எமது மொழி, கலை, பண்பாடுகள் நிறம்மாறித் திரிபடைநது போகாது தகுந்தவாறு வளர்ச்சியடைய நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

அன்புடன்,

சுப்பிரமணியம் இராசரத்தினம்



கணிதம் பயிலும் மாணவர்களுடன் ஆசிரியர்கள் பொன்மலர் திருஞானம் புவராஜன் இராசசுந்தரம்



வெலஸ்லி & பார்ளிமென்ரில் கல்வி கற்கும் தமிழ்மொழி மேற்பிரிவு மாணவர்களுடன் ஆசிரியர் திருமதி. கமலினி அருட்சோதி

Toronto
District
School Board

140 Borough Drive
Scarborough, Ontario M1P 4N6
Tel: (416) 396-7547
Fax: (416) 396-4281

June 16, 1998

Academy of Tamil Arts and Technology
2163 Lawrence Avenue East, Suite B
Scarborough ON M1P 2P5

Dear Mr. Rajaratnam,

It is again my pleasure to extend to the Academy of Tamil Arts and Technology greetings and congratulations on the occasion of your sixth anniversary.

In assisting Tamil people to integrate into Canadian society and the provision of services needed by the Tamil community is a great benefit to them. You should be proud of your efforts and accomplishments. The time commitments of the volunteers should not go unrecognized.

The orientation and settlement programs offered will be needed more and more as there is an increase in Tamil people to Canada, and Scarborough. The networking opportunities and courses for skills development offered to newcomers by your organization are crucial to a successful beginning in a new country.

Please extend my sincere congratulations to all those involved with the Academy of Tamil Arts and Technology.

I wish you continued success in the future.

Yours truly,

P. Addie

P.R. Addie
Senior Superintendent
Planning & Operations

Metropolitan Separate School Board
Conseil des écoles catholiques du Grand Toronto

June 22, 1998

**The Continuing Education Department of the Toronto Catholic School Board would like to congratulate the Academy of Tamil Arts and Technology on the occasion of their 6th Anniversary.**

**The six years have been marked with effective and devoted service provided by the organization to the Tamil community of Toronto.**

**The continuing Education Department has provided adult ESL, citizenship, LINC and Internatiional Languages secondary school credit programs in co-operation with the Academy of Tamil Arts and Technology.**

**We want to thank all of the staff and volunteers of the Academy of Tamil Arts and Technology for all of their efforts, dedication and support provided to the co-sponsored programs and the learners.**

**Sincerely,**


Leo Lynch

Leo Lynch
Co-ordinator
Continuing Education


LL/td

80 Sheppard Avenue East, North York, Ontario M2N 6E8 (416) 222-8282

# மாணவமணி



மலர்-2



97/98

மாணவர் ஆக்கம்

தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி ACADEMY OF TAMIL ARTS & TECHNOLOGY

# 'மாணவமணி' மலர் இரண்டின் வாழ்த்துப்பா


தமிழ்க்கலைக் கல்லூரி வாழ்வில் மலர்கின்ற
மாணவ மணிஏடு
இமிழ்கின்ற இசைபாடி இரண்டாம் இதழாக
இவ்வாண்டு மலர்கிறதே
தமிழன்னை தலைதூக்கி கனடாவில் வாழவே
மணிஏட்டை யாக்கிறாரே
தமிழீழக் கலாச்சார பண்பாடு மறக்காதே
மாணவர் ஆக்கிறாரே.

மாணவ மணிகளின் பாக்களும் கதைகளும்
ஆக்கமாய் வருகிறதே
பேணவே எம்மின எம்மிசைக் கலைகளும்
எழில்கொள மலர்கிறதே
ஆணவம் அகற்றிய இகவாழ்வு காணவே
மாணவர் முனைகிறாரே
காணவே கலைகளும் உரைகளும் போட்டியும்
மாணவர் ஆக்கிறாரே.

உலகத் தமிழர் இயக்க வழிநின்று
தமிழ்கலைக் கல்லூரி
நலமாயத் தமிழ்மொழி இலட்சிய மாய்க்கொண்டு
நயம்படக் கற்பிக்குதே
சீலம்மற வாத மாணவ மணிகளாய்
முன்பும்இன் றும்கற்றோர்
பலன்தரு உயர்கல்வி கனடாவில் கற்பதை
வியக்குதே எம்க(ல்)லூரி.

தொண்டாகத் தமிழினைப் படிப்பிக்கும் ஆசான்கள்
என்றும் உதவுறாரே
கண்ணான தமிழுக்கு பொறுப்பாளர் குழுவுடன்
நன்றாய் உழைக்கிறாரே
வண்ணமாய்க் கவின்கலை தமிழுடன் வளரவே
என்றும் விழைகிறாரே
திண்ணமாய்த் தமிழன்னை கனடாவில் வளர்வளே
வாழ்த்துதும் தமிழ்ப்பாங்காய்!

பண்டிதர் ம. செ. அலெக்ஸ்சாந்தர்
தமிழ் ஆசிரியர்
பொறுப்பாளர் - தமிழ்ப்பகுதி



# மாணவமணி

புத்தக ஆக்கம்:

**அ. முருகதாஸ் (தாஸ்)**

ஆக்கங்கள் தந்த மாணவர்கள்:

மு. ரகுலேந்திரன்
பா. துஷ்யந்தன்
ச. நிர்மலானந்தன்
ஹ. கஜிதன்
இ. றதீஸ்யோசப்
செ. கஜீவா
ந. கதாரிணி
ப. துசிதா
த. சங்கீதா
வே. கதர்சினி
ச. பிரபாலினி
வெ. பானு
செ. சர்மிளா

உதவி:
ப. துசிதா

நன்றி
ம. செ. அலெக்ஸ்சாந்தர் (ஆசிரியர்)
க. இராசரத்தினம் (பொறுப்பாளர்)

# யாழ் எண்ணங்கள்



யாழின் எண்ணம் யாதும் அறிய
நாளும் நாங்கள் ஏங்கி நிற்போம்
பாழும் சண்டை என்று முடியும்
வாழும் நாட்கள் என்று தொடங்கும்.


தினமும் நாங்கள் பள்ளி சென்று
வனப்பாய்த் துள்ளித் திரிந்த காலம்
நினைக்கும் போதே இன்பம் பொங்கும்
அனைத்தும் மீண்டும் எங்கே கிடைக்கும்?

சாலை ஓரம் வளரும் மரங்கள்
காலைப் பொழுதின் அழகைக் கூட்டும்
மாலை நேரக் காட்சி அழகைச்
சோலைப் பூக்கள் பார்த்தே ஏங்கும்.

அன்று அழகின் சின்னமாய்க் கண்டவை
இன்று பாழாய்ப் போனது கேட்டேன்
என்றும் எந்தன் நினைவில் உள்ளவை
தோன்றித் தோன்றி ஏங்க வைக்கும்.

மீண்டும் அந்நாள் வருமோ! வருமோ!!
வேண்டும் எந்தன் மனது என்றும்
தாண்டும் தடைகள் அனைத்தும் நீங்கி
மீண்டும் யாழே வேண்டும் எனக்கே!

செ.சுஜீவா



# கனடாவில் தமிழ்மொழி கற்க வேண்டியதன் அவசியம்

உலகத்தில் மொழி இல்லையானால் நாகரிகம் வளர்ந்திருக்காது. நாகரிகத்தின் வளர்ச்சிக்கு உடை, உறைவிடம், கலாச்சாரம் தேவையானதாக அமைந்த போதிலும் மனிதன் பேசும் மொழியே மிக முக்கியமானது. கனடாவில் பேசுவதற்கு எத்தனையோ மொழிகள் இருந்த போதிலும் நாம் தமிழர், தமிழரென இனங்காண்பது நம் மொழியாகிய தமிழினாலேயே ஆகும். ஆங்கிலம், பிரெஞ்சு இந்நாட்டின் அரசு மொழிகள் அவற்றை மாணவர்களாகிய நாம் கற்க வேண்டியது கட்டாயமானது. பாடசாலையில் இவ்விரு மொழியைக் கட்டாயமாகக் கற்பதுடன் நம் தாய் மொழியாகிய தமிழை நாம் கற்பதனால் பன்மொழிப் புலமை பெறும் பாக்கியமும், பிறமொழிகளில் உள்ளவற்றைத் தமிழிற்குக் கொண்டு வரவும் இயலும். இதனால் பாரதியாரின் சிந்தனையாகிய, "*பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் கொணர்தல் வேண்டும்*" எனும் அவரது கனவை நனவாக்க முடியும்.



உலக நாகரிகங்களை நன்கு அறிய தமிழ் கற்க வேண்டும். மனித இன வளர்ச்சியைப் படிப்படியாக பரிணாம வளர்ச்சித் துறைப்படி காணத் தமிழ்மொழியைக் கற்க வேண்டும். பல காலநிலைகளைக் கொண்ட, உலகின் பல பிரதேசங்களிலும் பரவி வளர்ந்த மொழியான தமிழ்மொழியை மாணவர்களாகிய நாம் கற்பதில் பெருமைப்பட வேண்டும். தமிழ்மொழி தமிழரல்லாதவர்களாலும் கற்கப்பட வேண்டிய மொழியாக இருக்கும் போது, அவ்விரத்தத்திலேயே பிறந்த மாணவர்களாகிய நாம் ஏன் தமிழ்மொழியை விரும்பிக் கற்க வழிவகைகள் சமைத்துக் கொடுக்கக் கூடாது? தமிழ்மொழி கற்பது என்பது தமிழ் அன்னைக்குப் பெருமையல்ல, கற்கும் எமக்கே பெருமை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

**ந.சுதாரிணி**

கனடா ஒரு பல்கலாச்சார நாடு. மானிடம், மனிதநேயம் ஆகியவற்றிற்கு மதிப்புக் கொடுக்கும் நாடு. எந்நாட்டவராயினும் சரி எம்மதத்தை, எக்கலாச்சாரத்தை, எம்மொழியைச் சேர்ந்தவராயினும் சரி அவரவர் தத்தம் கலாச்சாரப்பண்புகளை, மொழியை, மதத்தை வளர்ப்பதில் தடையேதும் விதிக்காதது மட்டுமல்ல, வேண்டப்படும் நேரத்தில் ஆக்கமும், ஊக்கமும், பணஉதவியும் கொடுத்துதவும் நாடு. சர்வதேச மொழிகள் பலவற்றை வகுப்பறைகளில் அந்தந்த மொழி பேசுகின்ற மாணவர்கள் கற்கும் வசதியையும், வாய்ப்பினையும் செய்து கொடுத்துள்ளமை இந்நாட்டு அரசின் கல்விச் சபைகளின் பரந்த விரிந்த ஆளுமையையும் மனப்பக்குவத்தையும் புலப்படுத்துகின்றது. ஆங்கிலத்தையும், பிரெஞ்சையும் அனைத்து மாணவர்களும் கற்க வேண்டிய கட்டுப்பாட்டுடன் தத்தம் மொழிகளை மூன்றாம் மொழியாகக் கற்க விரும்புவோர் கற்க வழி செய்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். இம்மூன்றாம் மொழியில் நம் தாய்மொழியாகிய தமிழைக் கனடா வாழ் தமிழ்ச்சிறார்கள் கற்க வேண்டியதும், கற்றுவல்ல பெருமக்கள் அதனைக் கற்பிக்க வேண்டியதும் பொறுப்புடைய கடமையாகும்.

சீனம், ஸ்பானிசு, ஷிந்தி, கிரேக்கம், ஜேர்மனி, உருது, குஜராத், பஞ்சாபி, அரபு, கொறியன், ரஷ்யமொழி போன்ற

மொழிகளுடன் தமிழ்மொழியும் சர்வதேச மொழியாகக் கருதப்பட்டு பாடசாலைகளில் மாலைநேர, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை வகுப்புகளாகக் கற்பிக்கப் படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளமை மனங்கொள்ளத் தக்கது.

இலங்கை ஒரு விவசாய நாடு. நம்மில் பெரும்பான்மையோர் கிராமப்புறங்களின் பின்னணியில் வாழ்ந்தவர்கள். பெரிய நகரங்களில் வாழுவதில் ஏற்படும் பண்பாட்டு அழுத்தம், ஆங்கிலமொழி கற்கும் சிரமம் என்பவற்றின் மத்தியில் தமிழ்மொழிக்கல்வி அவசியம் தானா? எனக் கேட்கப்படலாம். நிச்சயம் அவசியம் தான் என்பது ஏனைய வலுப்பெற்ற பல இன மக்களின் வரலாற்றிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட உண்மைச் சான்றாகும். உதாரணமாக வகுப்பறையில் நாம் சீன மாணவர்களை அவதானிக்கும் பொழுது அவர்களது முன்னேற்றம், அவர்களது இனப்பற்று, மொழிப்பற்று, மொழிக்குக் கொடுக்கும் மதிப்பு போன்றவற்றால் துரிதமான வளர்ச்சியையும், விருத்தியையும் அடைவதைக் காணக்கூடியதாயுள்ளது. அப்படியானால் தொன்மையும் செழுமையும் மிக்க வளங்கொளித்த மொழியுமாகிய நம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் மூலம் நாம் ஏன் துரித முன்னேற்றத்தை அடைய முடியாது? *"தமிழன் நாக்கிற்கு ஒரு தனியாற்றல் உண்டல்லவா! அது எந்த மொழியையும் எளிதில் கற்றுக் கொள்ளும்"* என்று டாக்டர் மு.வ. தனது 'யான் கண்ட இலங்கை' என்ற நூலில் கூறியிருப்பதை ஈண்டு சிந்தித்து ஏன் நாம் செயற்படுத்தக் கூடாது?

உயர்தனிச் செம்மொழிகளில் மிகத்தொன்மை வாய்ந்ததும் செழுமை மிக்க வளம் கொழித்ததுமான நம் தாய்மொழியைப் புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் தமிழராகிய நாம் மறந்து மறைந்து போக விடலாமா? கனடாவில் வாழும் மாணவர்களாகிய நாம் ஆங்கிலமொழியில் எமது கற்கை நெறிகளைக் கற்பது அவசியம். ஆனால் எமது தாய்மொழியாகிய தமிழ்மொழியை நாம் ஒரு பிரதான பாடமாகக் கற்க வேண்டியது தமிழராகிய எமக்குச் சிறப்புடையது. எமது மொழியின் தொன்மை, சிறப்பு, மொழியின் வளம், மொழியிலுள்ள இதிகாசங்கள், புராணங்கள், மொழி இலக்கியம் ஆகியவற்றினை நாம் கற்றுத் தெரிந்திருத்தல் அவசியம். அதுமட்டுமல்ல, எமது மொழியின் சிறப்பினை ஏனைய உலக மொழிகளுடன் ஒப்பிட்டு ஆராய நாம் எமது மொழியைத் தெளிவுபடக் கற்றிருக்க வேண்டும். ஒரு மொழியின் வாழ்வும் வளமும் அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோரின் மொழிப்பற்றிலும், அதனைக் கற்று இன்பமடைவதிலுமே தங்கியுள்ளது.

இன்று புலம் பெயர்ந்து பல நாடுகளில் வதியும் தமிழர்களைப் பிணைக்கும் பாசவிலங்கு தமிழ்மொழி என்பதை எவரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. முன்பு குடிபெயர்ந்து பல்வேறு இடங்களில் குடியமர்ந்தோர், தம் தாய்மொழி மறந்து அல்லலுறுவது எமக்கு ஓர் எச்சரிக்கையாகும். "அம்மா" என்று தமிழராகிய நாம், எமது அன்னையை அழைக்கும் போது ஏற்படும் ஆசை, பாசம், பரிவு, நேசம், இரக்கம் எல்லாம் மற்றைய மொழிகளிலே அம்மாவை அழைக்கும் போது ஏற்படுமா? ஆதலின் எமது அன்னை மொழியைப் படித்து அதிலேயுள்ள அழகை, பரிவை, இலக்கியங்களைத் தொன்மைக் கலைகளை அறிவோம். எமக்குப் பின்வரும் சந்ததியினரும் தமிழ்மொழியைப் பயில வழி சமைப்போம்.

* * * * *



# பொங்கல் திருநாள்

பொங்கல் தருமே பொங்கும் வாழ்வு
பொங்கல் பொங்க வந்திடு வீரே
சங்கத் தமிழர் திருநாள் இதுவே
எங்கும் இன்பம் தங்கிடும் இன்றே.



கதிரவன் மெல்ல எழுந்து வரவே
பூமியில் வண்ணக் கதிர்கள் வீழவே
பானையில் சாதம் பொங்கி வரவே
வணங்கிடு வார்கள் மக்கள் இனமே.

வாண வெடிகள் கொளுத்திடு வோமே
தூய ஆடை அணிந்திடு வோமே
அன்பாய் என்றும் பழகிடு வோமே
சேர்ந்தே வாழ்ந்து காட்டிடு வோமே.

முக்கனி உடனே கரும்புச் சாறும்
சாதமும் நாங்கள் படைத்திடு வோமே
இன்று எம்மை காத்தது போலே
என்றும் எம்மை காத்திடு வாயே

வந்தது இன்பப் பொங்கல் இன்றே
தந்தது நல்ல வாழ்வு ஒன்றே
சிறுவர் மகிழும் திருநாள் இதுவே
பெரியோர் அன்பை பெறும்நாள் இதுவே.

நாடு செழிக்கப் பொங்கிடு வீரே
ஏரு தழைக்க பொங்கிடு வீரே
நன்றி செலுத்த பொங்கிடு வீரே
நன்மை விளையப் பொங்கிடு வீரே.



த. சங்கீதா

# இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கி இளைஞர்களும் யுவதிகளும்.....

நாம் இன்னும் சில வருடங்களில் இருபத்தியோராம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்க உள்ளோம். இருபத்தியோராம் நூற்றாண்டில் வேகமாகவும் தொடர்ச்சியாகவும் மாறிக் கொண்டிருக்கும் தொழில்வாய்ப்புகளுக்கு ஈடு கொடுக்கக்கூடியதாக நம்மைத் தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டும். வருங்காலத்தில் ஒரு தொழிலை நம்பி வாழ்க்கை நடத்த முடியாத நிலை ஏற்படலாம். அதற்காக ஒரு தொழிலில் இருந்து கொண்டு இன்னுமோர் தொழிலையோ அன்றேல் அத்தொழிலில் ஒருவர் முன்னேற்றத்தைப் பெறத் தொடர்ச்சியாக அத்துறை சார்ந்த அறிவைப் பெருக்கிக் கொண்டே இருக்க வேண்டும். தொழில்நுட்பமும் தொழில்நுணுக்கமும் அதிவேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. நாளாந்த நவீன முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. 2003ம் ஆண்டில் கிடைக்கக்கூடிய தொழில்வாய்ப்புகளில் எழுபது வீதமானவை எவையென இன்று வரை தெரியாத நிலையில் நாம் உள்ளோம். எனவே மாணவர்களாகிய நாம் கல்வித் தகைமையை ஒழுங்கமைத்துக் கற்பதன் மூலம் தொழில் சார்ந்த அறிவைக் காலத்திற்கு ஏற்றவகையில் பெற்றுக் கொள்ளக்கூடிய முறையில் கற்றல் திறன்களை வளர்க்க வேண்டும்.

ந. சுதாரிணி



உலகளாவிய ரீதியில் திறந்த தொழிற்சந்தைகள் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. மூன்றாம் மண்டல நாடுகளென அழைக்கப்படும் வளர்முக நாடுகளிலும் முந்திய பொதுவுடைமை நாடுகளிலும் திறந்த தொழில் சந்தைக்குத் தேவையான திறமை பெற்ற தொழில் வல்லுநர்களை மேற்கத்தைய நாடான கனடா தயாரித்துக் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. தனிப்பட்ட ரீதியில் ஒருவர் பன்மொழித் திறமை பெற்றிருந்தால் அவருக்கு உலகநாடுகளில் வேலை வாய்ப்புகள் இருக்கின்றன.

ஒரு குடும்பம் தற்பொழுது உள்ளது போன்று ஒரு அங்கத்தவரின் உழைப்பில் மட்டும் தங்கியிருக்க முடியாது. ஒவ்வொரு குடும்பங்களிலும் தொழில் புரிபவர்கள் இரட்டித்துக் கொண்டு செல்லச்செல்லச் பிள்ளைபராமரிப்பு வீட்டுப்பராமரிப்பு மருத்துவசேவை கல்வி போன்றவற்றிற்கான செலவும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். இதனால் பிள்ளைப்பராமரிப்பாளர் வீட்டுப்பராமரிப்பாளர், மருத்துவச்சேவை போன்ற வேலைவாய்ப்புகளும் அதிகரிக்கும்.

பொருளாதார வளர்ச்சியும் தொழில் வாய்ப்புகளுக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது. முற்காலத்தில் வானொலியில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்பம் படிப்படியாக எல்லோர் கைகளிலும் வோக்மன்(walkmen), hand-phone, தொலைநகல்(fax), pager என வளர்ச்சி யடைந்துள்ளது. எதிர்காலத்தில் உள்ளகவலை (internet) இணைக்கப்பட்ட கணனி(computers with internet) கையில் கொண்டு திரியும் ஒரு பொருளாக மாறிவிடும். எனவே மாற்றங்களும் முன்னேற்றங்களும் தொடர்ச்சியானவை, அத்தியாவசியமானவை.

தனிநபர் ஒவ்வொருவரும் கட்டாயமாகச் சில திறன்களில் முன்னேறியிருக்க வேண்டும். உதாரணமாகச் சிந்திக்கும் திறன்(thinking skills), மற்றவர்களுடன் சேர்ந்து

செயலாற்றும் திறன் (co-operative skills), கருத்துப்பரிமாறும்திறன் (communication skills), தொழில்நுட்பத் திறன்(technical skills), தொழில்நுணுக்கத் திறன் (technological skills), தலைமைத்துவத் திறன் (leadership skills), குழுக்களாக இயங்கும் திறன் (team work) போன்றனவாகும்.

கனடாவில் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் ஒரு தொழிலையே தமது வாழ்நாள் பூராவும் செய்துள்ளார். இன்று குறைந்தது நான்கு தொழில்களைச் செய்கின்றார். ஆனால் 21ம் நூற்றாண்டில், அதாவது இப்பொழுது உயர்வகுப்பு மாணவர்கள் பல்கலைக்கழகம் முடித்து வந்ததும் குறைந்தது எட்டுக்கும் மேற்பட்ட தொழில்களைத் தமது வாழ்நாளில் செய்ய நேரிடும். எனவே இலங்கையில் எமது பெற்றோருக்கு கிடைத்த தொழில்வாய்ப்பின் அதிஷ்ட நிலை எமக்கு வருங்காலத்தில் ஏற்படாது. இதற்குக் காரணம் தொழில்நுணுக்க வளர்ச்சியே(growing technology) ஆகும். எனவே நாம் தொழிலுக்குத் தொழில் மாறக்கூடிய மனவுறுதி உடையவர்களாகவும்(adaptability-change work), அறிவுடையவர்களாகவும்(knowledge) இருக்க வேண்டும். எனவே இந்நிலையில் நாம் குறிப்பாக கணனிச் சூழலில்(computing environment) திறமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். எத்துறையில் படித்தாலும் கணனியினூடாகப் படிப்பது நன்று.



ஒரு நாட்டின் சனத்தொகை பிறப்புவீத அதிகரிப்பாலும் இறப்பு வீத வீழ்ச்சியினாலும் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டு செல்லலாம். கனடாவைப் பொறுத்த வரையில் மேற்கூறிய வேக வளர்ச்சியை விட நாள்தோறும் உலகின் பல பாகங்களில் இருந்து மக்கள் வந்து குடியேறிக் கொண்டே இருக்கின்றார்கள். இச்சனத்தொகை அதிகரிப்பு பாடசாலை மட்டத்திலிருந்து தொழிற்சந்தை வரை போட்டியிடுகின்றது. எனவே இத்தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கு நாம் விரைவாகவும், திறமையாகவும் கற்று எமது போட்டியாளர்களை வெல்ல வேண்டும். கனடா ஒரு வளர்ச்சியடைந்த நாடு. உலகத்திலேயே முதலிடம் வகிக்கும் பல பல்கலைக்கழகங்கள் இங்குள்ளன. சிறந்த பல போதனாசிரியர்கள், சிறந்த ஆராய்ச்சியாளர்கள், நிபுணர்கள் உள்ளனர். அவர்களையும், அவர்களது சேவைகளையும் நாம் அதி உன்னத முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பட்டப்படிப்பு என்பது கல்வித்திறனை மட்டும் தன்னகத்தே கொள்ளாது, பழக்கவழக்கங்கள், அநுபவம், யோசிக்கும் முறை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, மற்றவர்களுடன் சேர்ந்து வேலை செய்தல், குழுமுயற்சி, ஒரு பிரச்சனைக்குத் தீர்வு காணுதல், தீர்மானம் எடுத்தல் போன்றவற்றையும் பழக்குகின்றன. நாற்பது மில்லியன் தொலைக்காட்சிப் பெட்டிகள் செய்வதற்கு பதினெட்டு வருடங்கள் எடுத்தன. 40 மில்லியன் வானொலிப் பெட்டிகள் உருவாக்குவதற்கு 28 வருடங்கள் சென்றன. ஆனால் தற்பொழுது 18 மாதங்களில் 40 மில்லியன் மக்கள் உலகளவில் உள்ளகவலையினால் (internet) இணைந்துள்ளார்கள்.


வருங்காலம் கணனியுகமாக மாறவுள்ளது. மாணவர்கள் பாடசாலைக்குப் போக வேண்டியதில்லை. வீட்டிலிருந்து கொண்டே உள்ளகவலை(internet) மூலம் கல்வி கற்கலாம். வேலைக்குப் போகவேண்டியதில்லை வீட்டிலிருந்து கொண்டே உலகநாடுகள் அனைத்துக்கும் உள்ளகவலை(internet) மூலம் தொழில் செய்யலாம்.

வீறு நடை போடும் தொழினுணுக்க வளர்ச்சியுடன் போட்டியிட்டு எம்மைத் தயாரித்து எமது வாழ்வை சுபீட்சமாகக் கொள்ள இளைஞர்களும் யுவதிகளும் புலம் பெயர்ந்து வாழும் நாடாகிய கனடாவில் துறை தேர்ந்த பிரிவுகளில் புகுந்து கொள்ள முயற்சிப்போமாக.


# வலன்ரைன் தினம்

வலன்ரைன் தினம் புனிதமான நாளாக மாசி மாதம் 14ம் திகதி உலக மக்கள் அனைவராலும் கொண்டாடப்படுகின்றது. முக்கியமாக காதலர் தம் அன்பைப் பரிமாறும் உன்னதநாளாகும். வலன்ரைன் நாளன்று பெற்றோர், நண்பர், ஆசிரியர், சகோதரர் போன்றவர்கள் வாழ்த்து மடல்களை அனுப்பி தங்களுடைய அன்பைப் பரிமாறுவர். வலன்ரைன் நாளில் "இதயம்" புரதான சின்னமாக பேணப்பட்டு வருகின்றது. இதயம் இல்லாவிட்டால் உயிர்வாழமுடியாது என்பதை வலன்ரைன் தினத்தில் அன்று அறியலாம். வலன்ரைன் தினத்தன்று பொதுவாக எல்லோராலும் (be my valentine) என்று கூறியதாக பழைய ஏட்டில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது. காதலர்கள் சிவப்புப் பூ க்களைக் கொடுத்து அன்பைத் தெரிவிப்பர். வலன்ரைன் தினம் வருவதற்கு முன்னர் கடைகளில் இதயவடிவில் இனிப்புக்கள் விளையாட்டுப் பொருட்கள் விற்பனையாகும். சிறு பிள்ளைகள் தமது பரிசுகளை தமக்கிடையே பரிமாறிக் கொள்வர். இதயவடிவில் சின்னங்களை தமது ஆடையில் அணிந்து காணப்படுவர். ஒவ்வோரு நாட்டு மக்களும் வெவ்வேறு விதமாக வலன்ரைன் தினத்தைக் கொண்டாடுவார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் சிறு பிள்ளைகள் வலன்ரைன் கீதங்களைப் பாடிமற்றவர்களிடமிருந்து பரிசு, பணம், இனிப்பு போன்றவற்றைப் பரிசாகப் பெறுவர். இங்கிலாந்தில் இதய வடிவில் கேக் செய்து வைத்திருப்பர். இன்றும் பிரித்தானியாவில் இவ்வாறான செயற்பாடுகள் நிகழ்ந்து வருகின்றன. மணமாகாத பெண்கள் சூரியன் உதித்த பின்னர் தான் வலன்ரைன் தினத்தன்று நித்திரை விட்டு எழுவார்களாம். பின்னர் ஜன்னல் வழியே வீதியை பார்ப்பார்களாம். வீதியில் அவர்களின் பார்வையை



கடந்து சென்றவரும் மணம் முடிப்பதும் ஒரேமாதிரிக் காணப்பட்டால் அவர்களை மணப்பார்களாம். இதை பிரபல நாடக ஆசிரியர் Hamlet வில்லியம் ஷேக்ஷ்பியர் குறிப்பிடுகின்றார்.



**Good & Morrow! Is. St. Valentine's day**
**All in the morning be time**
**And I a maid at your window**
**To be your valentine.**

வலன்ரைன் தினம் கொண்டாடப்படுவதற்கு பல காரணங்கள் நூல்களின் மூலம் அறிந்து கொள்ளலாம். வசந்த காலம் காதலர்களுக்கு உரிய காலமாகக் கருதப்படுகின்றது. பழைய Roman Festival Luper Calia விற்கும் வலன்ரைன் தினத்திற்கும் தொடர்பு இருப்பதாக கூறப்படுகின்றது. ஏனெனில் இரண்டும் கிட்டத்தட்ட ஒரே நாளில் வருகின்றது. நோமன் பிரெஞ்ஸ் என்பவர் Normandy இளவயதில் galantime என்று அழைக்கப்பட்டார் இது மருவி valentine ஆக வந்ததாகவும் கருதப்படுகின்றது. gallant என்றால் காதலர் என்ற அர்த்தமும் உண்டு. ஆங்கில புராதனமக்கள், பறவைகள் தமக்கிடையே அன்பு கொள்வதைக் கருதப்படுவதாக காணப்படுகின்றது. பிரான்ஸ் நாட்டவரான சார்லஸ் யுத்தத்தின் போது இங்கிலாந்தில் ஜெயிலில் அடைக்கப்பட்ட போது தனது மனைவிக்கு எழுதிய வாழ்த்தே வலன்ரைன் வாழ்த்து என்றும் புராதன மக்களால் கருதப்படுகின்றது.

**வே.சுதர்சினி**

சார்லஸ் தன் மனைவிக்கு அனுப்பிய வாழ்த்து கடிதமும் அட்டையும் 1415ல் ஆகும்.

இந்த வாழ்த்துமடல் 1ம் உலகப் போரின் போது மனைவியைப் பிரிந்திருக்கும் சிப்பாய் தனது மனைவிக்கு அனுப்பியதாகக் கருதப்படுகின்றது. இந்த வலன்ரைன்ஸ் வாழ்த்து மடல் அனுப்பும் வழக்கம் 14ம் நூற்றாண்டில் இருந்தே தொடங்கிவிட்டது என்பதை அறியலாம். இப்போதேல்லாம் வாழ்த்து அட்டையில் வாழ்த்துக்கள் அச்சடிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அப்போதைய காலங்களில் அனுப்புபவரே வாழ்த்தையும் எழுத வேண்டும்.

* * * * *



# என்நெஞ்சில் என்றுமுள தண்ணொளியும் நீதான்

பூ என்று நான் சொல்லும் பூமகளும் நீதான்
தேனாக இனிக்கின்ற தேவதையும் நீதான்
கண்வழியில் நடமாடும் கண்மணியும் நீதான்
விண்வெளியில் மின்னுகின்ற மின்மினியும் நீதான்.


பூங்காவில் நான் காணும் புஷ்பங்கள் நீதான்
தூங்காமல் நான் இருக்கக் காரணமும் நீதான்
வீங்காத மெல்லிடையே கொண்டவளும் நீதான்
மாங்காய் போல் மார்பழகு உள்ளவளும் நீதான்.

வட்ட நிலா வாழ்கின்ற வட்டமுகம் நீதான்
தட்டத்தட்ட ஒலிக்கின்ற தங்கமுகம் நீதான்
வெட்டவெளி வானத்தின் வெண்ணிலவு நீதான்
பட்டமரம் பூப்பூக்கக் காரணமும் நீதான்.

பல இரவில் நான் காணும் பௌர்ணமியும் நீதான்
சில நாளை அலங்கரிக்கும் வானவில்லும் நீதான்
திரிகளிலே எரிகின்ற தீபஒளி நீதான்
என் நெஞ்சில் என்றுமுள தண்ணொளியும் நீதான்...

பா. துஷ்யந்தன்

# எமது ஊர்



காரை நகராம் எங்கள் ஊராம்
ஏரை நம்பியே வாழும் ஊராம்
காரை வயல்கள் நிறைந்த நாடாம்
கடற்கரை சூழ்ந்த எங்கள் நகராம்.

கடலின் நிறமோ நீல நிறமாம்
கடலின் அழகோ என்ன அழுகு!
கடலில் அலைகள் அடிப்பதும் அழகு
அவைகள் மோதிப் போதுவதும் அழகே!
காலையில் சூரியன் கடலில் உதிப்பதைக்
காண்பதே எங்கள் மக்களின் இன்பம்.
சூரியன் மறைவதும் இயற்கையின் அழகே!
கடலில் சந்திரன் மாலையில் தெரிவது
பெண்கள் மஞ்சள் பூசிக் குளிப்பது
போலே கடலிலே காட்சி அளிக்கும்.
கடலில் மீனவர் தோணியில் சென்று
தூண்டிலைப் போட்டு மீனைப் பிடித்து
பறியில் போட்டு கரையில் வந்து
கொட்டும் போது அவைகள் துடிப்பதைப்
பார்ப்பதும் எங்கள் மக்களின் விருந்து.
ஊரிலே உள்ள மக்கள் எல்லோர்
மனதிலும் பெரிய ஆனந்தம் பொங்கும்
எல்லோர் வீட்டிலும் மதியம் மீன்கறி
தெருவிலே நடக்கும் எல்லோர் முக்கையும்
துளைக்கும் வாசனை என்ன! என்ன!!

ச.பிரபாலினி

# தீபாவளிப் பண்டிகை

**ச.நிர்மலானந்தன்**

தைப்பொங்கல், புதவருடப்பிறப்பு, நவராத்திரி போன்று தீபாவளியும் ஒரு பண்டிகையாகும். இது தமிழர்களின் ஒரு முக்கிய பண்டிகையாகும். இது வருடம் தோறும் ஐப்பசி மாதத்தில் வரும் ஐப்பசித்திங்களுக்கும், கார்த்திகைக்கும் இடையே வரும் அமாவாசையை ஒட்டிக் கொண்டாடப்படுகின்றது. தீபாவளி என்றால் சிறுவர்களுக்கு அளவில்லாத சந்தோசம். தீபாவளியன்று புத்தாடை அணிதல், புது மிட்டாய்கள் சாப்பிடுதல், அது மட்டுமா, விதம் விதமான பட்டாசுகள் கொளுத்துதல் அளவில்லாத சந்தோசம். சிலபேருக்கு விளையாட்டு வினையாகியும் விடும். பின்வரும் பாடலிலும் தீபாவளியைச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

''தீபாவளி என்றால் தித்திப்பாய் இருக்கும் என்று– அந்நாளில்
பட்டாசும் மிட்டாயும் பட்சணமும் தான் வாங்கி
புதுப்புனல் நீராடி புத்தாடை தான் பூண்டு – முன்னாளில்
புதுக் குடும்பம் போலப் புறப்படுவோம் கோவிலுக்கு.''



ஒளி இல்லாத விழா இல்லையெனினும், ஒளியையே மையமாக வைத்து ஒன்று கூடி ஒளியின் காட்சியில் மகிழ்வதே தீபாவளி ஒளியின் தனிச்சிறப்பு. வீடுகளை வண்ணங்களால் ஏற்றி ஒளிபாய்ச்சுவதும், வண்ணங்கள் மிளிரும் பட்டாசு ஒளியும் சிறியவர்களின் பெரியவர்களின் மகிழ்விற்கும் காரணமாகின்றது. இவ்விழாவிற்கெனப் பூர்வீகப் பொருளும் சமயக் கருத்துக்களும் நிறைந்து கிடக்கின்றன. தீபாவளியின் முக்கிய தத்துவம் என்னவென்றால் உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் ஞான ஒளியை ஊட்டி அவர்களிடம் இருந்து அஞ்ஞான ஒளியை இல்லாமல் செய்தல் ஆகும். அதாவது மக்கள் செய்த பாவங்கள், உயிர்க்கொலைகள் போன்றவற்றை மன்னித்து அவர்களுக்கு அருள் கொடுப்பதே மிகச் சிறந்ததாகும்.

தீபாவளியின் முக்கிய நோக்கு என்ன வென்றால் இருள் விலகுதல், அதாவது உலகில் இருந்து இருளைப்போக்கி ஒளியில் விடுதல். மக்களிடம் இருந்து கடும் துயரங்களைப் போக்கி அவர்களுக்கு என்றும் வாழ்வில் இனிய ஒளியைத் தோற்றுவித்தல். மக்களிடத்தே அன்பு, பற்று, பாசம், இரக்கம், கருணை போன்றவற்றை நிலவச் செய்தல்.

"யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக"
என்று சொல்வர்.

சிறுவர்கள் இனிப்பு சாப்பிட்டுக்களித்தல் வெடிகள் கொளுத்துதல் சக்கரவாணம், சீறு வாணம், ஈர்க்கு வாணம், வெடி போன்ற வெடிகளைக் கொளுத்தி மகிழ்வார்கள். அவர்கள் தம் உள்ளத்திற்கும் உலகிற்கும் சந்தோசத்தைக் கொடுப்பார்கள். உள்ளவற்றையே பகிர்ந்து கொள்ளுங்கள் அதுவே பேரின்பம். இதற்கு ஒரு பழமொழி சொல்வார்கள் "எள்ளானாலும் எட்டாகப் பங்கிட வேண்டும்." இல்லையென்று கையேந்தி பிச்சைகேட்டு வருபவர்களுக்கு கொடுங்கள். அதுவே மிகப் பெரிய தானதருமம் ஆகும். யாழ்ப்பாணத்தமிழர்கள் தீபாவளியன்று மனதில் இருந்து தீய எண்ணங்களைப் போக்கி நல்லவர்களாக வாழ இறைவனிடம் ஆசி பெற்று வருவார்கள். அதன்பின்பு தமது உறவினர்களுடைய இல்லங்களுக்குச் சென்று மகிழ்வார்கள். அன்றைய தீபாவளி தினம் முடிவடைகிறது.

ஆனால் இந்தியாவில் மக்கள் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்டுக் கொண்டாடுகின்றார்கள். சிலர் தீபாவளியை தாம்பவிழா என்றும் கங்காவழி என்றும் சிமா நிலத்தில் கொண்டாடுகின்றார்கள். அவர்களின் நோக்கு என்ன வென்றால் தாங்கள் கங்கை நீரில் ஒரு துளி நீரை அருந்தினாற்கூட அதன் மோட்சத்தை தாங்கள் பெறலாம் என்ற நம்பிக்கை அவர்களிடத்தே காணப்படுகின்றது. வேறு சில மாநிலங்களில் மாபலிச் சக்கரவர்த்தியின் அறியாமை, மமதை தலைக்கனம், போன்ற கொடிய இன்னல்களை அழித்த தினம் என்று ஒருசிலர் குறிப்பிடுகின்றனர். வேறு சிலர் ஸ்ரீராமபிரான் அயோத்தியை வந்தடைந்த நாள் தீபாவளி தினம் என்று, அதனை மறக்காமல் ஞாபகப்படுத்தும் முகமாக என்று கொண்டாடுகிறார்கள் என்றும் இராமர் அயோத்தி மன்னராக முடி சூடப்பட்ட விழாவின் நினைவுநாள் எனவும் இந்திய வரலாற்றில் பெரும் புகழ் வாய்ந்த விக்கிரமாதித்த மன்னனின் முடிசூட்டு விழாவின் நினைவு நாளெனவும், ஒரு சிலர் கூறுகின்றனர். தமிழர்களாகிய நாங்கள் நரகாசூரன் என்ற கொடிய அரக்கனை விஷ்ணு பகவான் அழித்து வெற்றி கண்டு வாகை சூடிய நாளாகக் கொண்டாடுகின்றார்கள் இவ்விழாவிற்கு கருத்து பலவாயினும் அதன் அடிப்பொருளும், மையக்கருத்தும் ஒரே நோக்கமாகவே உள்ளன.

"தீபாவளி
ஒரு ஒளி திருவிழா
ஒரு மகிழ்ச்சி விழா
ஒரு வெற்றி விழா"



கொடியவர்களின் வீழ்ச்சியையும், நல்லவர்களின் எழிச்சியையும் கொண்டாடும் விழாவாகக் காணப்படுசிறது. தீபாவளி விளக்குகள் கண்களுக்கு மட்டும் காட்சியல்ல. உள்ளத்திற்கும் அவை ஒளியேற்றுகின்றன. இறைவன் இருள் அனைத்தையும் அகற்றும் ஆதவன் எனும் அற உணர்வையும் விக்குகின்றது. தீபாவளி விளக்குகள், அவற்றின் ஒளி இறைவனின் பிரசன்னத்தையும் அதனால் உள்ளத்திலே சுடர்விடும் நம்பிக்கையின் வெற்றியையும் கொண்டாடுகிறதெனலாம். இந்த ஒளி விழாவின் உட்பொருள் கிறிஸ்தவர்களின் கவனத்தை ஈர்க்கின்றது. தீபாவளி விளக்குகள் பாஸ்கு சனிக்கிழமை இரவில் எரியும் திரிகளை ஞாபகப்படுத்துகின்றன. புது நெருப்பு மூட்டி "கிறீஸ்துவின் ஒளி இதோ" என்று பாடிவரும் பவனியை நினைவூட்டுகின்றன. பாவ இருள் மறைந்து மீட்பு ஒளி மிளிர்கின்றது என்று எக்காளமிடும் அறிக்கையை எதிரொலிக்கின்றன. தீபாவளிப் பட்டாசுகள் சாவை வென்று விடுவார். சாபத்தை முறித்துவிட்டார். என்ற பாஸ்கா மகிழ்வைத் தீபாவளித் திருவிழா உணர்த்தி நிற்குின்றது . வரிசை வரிசையாக எரியும் தீபாவளி விளக்குகளின் ஒளியைப்பற்றி விவிலியம் கூறும் இறை வார்த்தைகளை நினைவூட்டுகின்றன. "இறைவன் ஒளியாய் இருக்கின்றார். அவருள் இருள் என்பதே இல்லை. "உங்களை இருளில் நின்று வியத்தகு ஒளிக்கு அழைத்த இறைவனின் புகழ்ச்சிகளை அறிவிப்பது உங்கள் பணி. யோவானின் நற்செய்தி ஒளியின் மறைப்பொருளை அவருள் ஒளிருந்தது. அவ்வுயிரே மக்களுக்கு ஒளி. அவ்வொளி இருளில் ஒளிர்ந்தது. இருளோ அதை மேற்கொள்ளவில்லை" என அறிவிற்கின்றனர்.

தீபாவளியை இப்போது எமது தாய் நாட்டுடன் ஒப்பிடுகையில் சமுதாயத்திலே தடுமாறி எரியும் மனித மாண்பையும் மக்களின் ஒற்றுமையையும் தூண்டிவிட வேண்டும். நீதி ஒளிசுடர விசுவாச எண்ணையை ஊற்ற வேண்டும். அச்விசுவாச ஒளிதான் அக்கண்களைத் திறக்கும். அக்கண்கள் திறந்தால் அருளின் ஒளிபிறக்கும். அப்புத்தொளியில் புது உலகம் பிறக்கும்.

இறையை தீபாவளி நாட்களில் அநீதியும் அக்கிரமமும் நிறைந்த கொடிய ஆட்சியை நடத்தும் இனவாத அரசினரின் மனக் கண்கள் திறக்க வேண்டுவோம். அங்கு நீதி சமாதானம் என்கிற திரிகள் ஏற்றப்பட்டு எம்மக்களின் வாழ்விற்கு புதிய ஒளி கிடைக்கட்டும். அப்புத்தொளியில் தமிழனுக்கென்றொரு தனிநாடு மலரட்டும். புத்தொளி நிறைந்த புதிய உலகம் காணவே தீபாவளி விளக்குகள் அனைவரையும் அழைக்கின்றன. வரவிருக்கும் ஒளி வாழ்விற்கு முன்னறிவிப்பாகவும், வாழ வேண்டிய நம்பிக்கைக்கு சின்னமாகவும் எமது தீபாவளித் திருநாள் விளங்கிடும்.

* * * * *

# இருவர்

நீ துடிப்பு
நான் இதயம்
நீ துடித்தால் நான் இருப்பேன்

நீ இசை
நான் சப்தம்
நீயின்றி நான் இல்லை

நீ நிலவு
நான் இரவு
நீ வந்தால்தானே நான் அழகு

நீ பூமி
நான் சந்திரன்
உன்னையே நான் சுற்றிவருவேன்

நீ மலர்
நான் மரம்
நீ மலர்ந்தால்தான் எனக்கு பெருமை

நீ காற்று
நான் புல்லாங்குழல்
நீ புகுந்தால்தான் நான் இசைப்பேன்

நீ சூரியன்
நான் காலை
நீ வரும்போது நான் பிறப்பேன்

நீ இமை
நான் விழி
நீ திறக்கும்போது நான் காணபேன்

நீ இலட்சியம்
நான் பயணி
உன்னை அடைவதே என் நோக்கம்

நீ பூமி
நான் மழை
நான் கருவுற்றதே உன்னில்தான்

நீ மௌனம்
நான் சப்தம்
நீ வந்தால் நான் மறைவேன்

ஜூலிஸ் ஜோசப்

# எண்ணங்கள்

யாழின் எண்ணம் யாதும் அறிய
எங்கள் ஈழம் விரைந்து மலர
நல்ல தமிழை நாமும் கற்று
நலமாய் வாழ்வோம் ஈழம் கண்டே

குண்டுகள் பலவும் விழுந்த மண்ணில்
வீடுகள் எல்லாம் அழிந்து ஒழிய
பிணங்களும் மனங்களும் தெருவில் கிடக்க
எண்ணம் மட்டும் விடிவைத் தேடுதே

நண்டுகள் வந்து போன தாலும்
குண்டுகள் வந்து விழுந்த தாலே
கரும்புலி கடலினுள் போன தாலும்
வெடித்தன படகுகள் கடலின் மேலே

மக்கள் மனதில் தீராத சோகம்
ஈழம் காணும் தீராத மோகம்
புதைகுழி தோறும் புலிகள் விதைத்த
ஈழம் மலரும் நாளும் வாராதோ!



மு.ரகுலேந்திரன்

# கனடா-பாங்காய் ஒன்று சேர்வோம்


கனடா எங்கள் நாடு
காட்சி மிகுந்த நாடு
அழகுப் பூக்கள் உண்டு
ஆறு கூட உண்டு
கனி வளமும் உண்டு
பாங்காய் பாலர் பாட
பாடசாலை உண்டு
பழ மரங்கள் உண்டு
பாடும் பறவை உண்டு
மீன் வளமும் உண்டு
பல் மதமும் உண்டு
பல் இனமனிதர் உண்டு
பாங்காய் நாங்கள் வாழப்
பழகப் பண்ணும் கனடா
பழகிப் பழகி மகிழ்வோம்
பாங்காய் ஒன்று சேர்வோம்

எம். எஸ். ஏ

# செல்லப்பிராணி

நாயே நீயே செல்லப் பிராணி
நானே சேர்ந்து ஆடும் பிராணி
நன்றாய் நன்றி காட்டும் பிராணி
இன்றும் மனிதர் போற்றும் பிராணி

நாயே நீயின்றி நானே இல்லை
நானில் லாமல் நீயும் இல்லை
நம்பிக்கை உண்டேல் தோல்வி இல்லை
நல்லவன் உன்போல் யாருமே இல்லை



ஜெ. சுஜீதன்

# இருவர் மட்டும்

நீ பேய்
நான் பிசாசு
இருவரும் சேர்ந்து நரகில் உலவீடுவோம்.

நீ பூசனிக்காய்
நான் புடலங்காய்
இருவரும் சமையலில் ஒன்றிணைவோம்.

நான் ஊன்
நீ உயிர்
நீ இருக்கும்வரை நான் இருப்பேன்

நீ பூ
நான் வண்டு
உன்னையே சுற்றி வருவேன்.

நீ மின்னல்
நான் இடி
உன்னைத் தொடர்ந்து நான் வருவேன்.


நீ அம்மி
நான் குழவி
உன்னைத் தடவிக் கொண்டே
இருப்பேன்.

நீ வில்
நான் அம்பு
உன் இலக்கை நான் அடைவேன்

நீ கரும்பு
நான் எறும்பு
உன்னையே மெல்ல மெல்ல சுவைப்பேன்

நீ பேனா
நான் பென்சில்
இருவரின் ஆயுளும் சரித்திரம் படைக்கும்

புரஜு



# அன்பு

மு.ரகுலேந்திரன்

அன்பு என்ற ஒன்றையே, அறியின் அது இன்பம் இன்பம் என இயம்பும். இந்த அன்பை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது, இதனை செயல்களாலேயே புரிந்து கொள்ள முடியும். இன்றைய இளைய தலைமுறையினரை கவர்ந்து எங்கும் வியாபித்து நிற்பது அன்பு என்ற காந்தசக்தி என்றால் மிகையில்லை. அன்பு எம்மை பல சந்தர்ப்பங்களில் ஆட்கொள்ளுகிறது. அன்பிற்கு உருவமில்லை, பருவமில்லை, அது எப்போது எங்கு ஏற்படுகிறது என எண்ணின் விடை வளர்ந்து கொண்டேயிருக்கும். பரிசுத்த வேதாகாமத்தில் (பக்கம் 1063, 13) அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது, அன்புக்குப் பொறாமையில்லை, அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைக் செய்யாது, தற்பெருமை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும், சகலதையும் தாங்கும் என்று அன்பின் பெருமையைக் கூறுகின்றது.

அநேக உள்ளங்களின் உணர்வுகளைப் பின்னிப் பிணைய வைக்கிறது இந்த அன்பு. மனிதன் இவ்வுலகில் நல்லவனாக வாழ அன்பு வழி சமைக்கின்றது. மனிதனது மனநிலை அன்பு என்ற ஒன்றில் தன்னை ஐக்கியப் படுத்தி அதில் மகிழ்வையும் வேதனையையும், சோதனையையும் ஏற்படுத்திக் கொள்கிறது. அன்பினால் இலயிகப்பட்ட மனம் சில சமயம் நிம்மதி தேடியலைகிறது. ஏதோ ஓர் உறவில் நிம்மதி கண்டு மகிழ்கிறது. அது தாயன்பாகவோ, சகோதர அன்பாகவோ, கணவன் மனைவி அன்பாகவோ, நண்பனுடைய, குரு மாணவனிடத்தில் கொண்ட அன்பாகவோ, அடியவர்கள் இறைவனிடம் செலுத்தும் அன்பாக என்று பல்வேறுபட்ட தோற்றப் பொலிவுடன் காணப்படுகிறது.

திருவள்ளுவர் கூட தமது குறளில் அன்பிற்கு எல்லையில்லை, அதனைத் தடுத்து வைப்பதற்கு யாராலும் முடியாது. அன்புடையவரின் சிறு கண்ணீரே அவர் உள்ளே இருக்கும் அன்பை பலரும் அறிய வெளிப்படுத்திவிடும் என்கிறார்.

உறவுகளிடையே ஏற்படுகின்ற அன்பானது தனிமனித வாழ்க்கையிலே ஏதொவொரு விதத்தில் நிம்மதியை ஏற்படுத்தி அவன் வாழ்வில் பரிபூரணமவளர்ச்சியை ஏற்படுத்துகின்றது. அன்றில் இருந்து இன்று வரை எல்லா மதங்களும் உபதேசிக்கும் சாரத்தை நாம் பிழிந்து எடுத்தோமானால் மிஞ்சும் ஒரேயொரு வார்த்தை அன்பு என்ற ஒன்று தான். அன்பின் மறுபெயர் தான் நல்லெண்ணம். இது அன்பின் தொடக்க இடமாக அமைகின்றது.

அன்பு என்பது பல வடிவங்களை எடுக்கிறது. சமுதாயத்தின் மீது உள்ள அன்பு காரணமாகவே காந்தியடிகள் தம்மை வருத்திக் கொண்டார். உண்ணாவிரதம் மேற்கொண்டார். தியாகி திலீபன் தமிழீழத்தின் மீது கொண்ட அன்பு காரணமாக உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார். 1853ல் நடந்த கிரிமியாப்போரில் குண்டு அடிபட்டுக் கிடந்த தளபதி தண்ணீர் கேட்டபொழுது எல்லோரும் தண்ணீர் கொண்டு சென்றனர். ஆனால் அங்கு அடிபட்டுக் கிடந்த சாதாரண சிப்பாய் ''தண்ணீர் தண்ணீர்'' என்று அலறிய பொழுது யாரும் தண்ணீர் கொடுக்க முன்வரவில்லை. ஆனால் தளபதியோ தனக்குக் கிடைத்த தண்ணீரைச் சிப்பாய்க்கு கொடுத்துவிட்டு ஆனந்தமாக உயிர் துறந்தார். அன்னாரின் அன்புச் செயலை, தியாகத்தை இன்றும் உலகம் மதிக்கிறது.

பாரி மன்னன் படருவதற்கு முடியாமல் தவித்துக் கொண்டிருந்த முல்லைச் செடிக்கு தன் பொற்றேரையே அது பற்றிப்படர்வதற்கு விட்டுவிட்டு நடந்து சென்றான். சிபிச் சக்கரவர்த்தியோ புறாவிற்காக தன்னையே அர்ப்பணித்தவன். குமண வள்ளல் புலவரின் வறுமைக்காகத் தன் தலையையே பரிசாகக் கொடுக்க முன்வந்தவன். மேரிக்கியூறி அம்மையார் தன் கண்டுபிடிப்பான ரேடியத்தை வங்கியிலே வைத்துவிட்டு நாட்டுக்காகச் சேவை செய்யச் சென்றார். இவர்கள் ஒவ்வொருவரும் தாம் கொண்ட அன்பின் காரணமாகவே இச்செயல்களை செய்துள்ளார்கள்.

பசியால் வாடும் குழந்தையிடம் கொண்ட அன்பு காரணமாக ஏழைத் தாய் திருடக் கூடக்கூடும். அழும் குழந்தையை அன்போடு தூக்கி அணைத்துக் கொண்டால் அதன் அழுகையும் நின்றுவிடும். அன்பாக அணைப்பதன் மூலமாகவே அல்லல்களை நிச்சயமாகப் போக்க முடியும். கோபம் தணிக்க அன்பான அரவணைப்பு உதவுகிறத. கோபம் இரத்த அழுத்தத்தை அதிகரிக்க வைக்கிறது. நாடித் துடிப்பும் அதிகரிக்கிறது. இரத்த நாளங்கள் கூட புடைத்தெழுகின்றன. அவரது அன்புக்குப் பாத்திரமானவர்கள் அரவணைப்பதன் மூலமே வேகமாக கோபம் தணிந்து விடுகிறது. இதிலிருந்து அன்பினுடைய ஆழமான உள உணர்வுகள் உடலோடு கூடப் பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பதை அறிய முடிகிறது.

தனிமை, ஒதுக்கிவைக்கப்படல் போன்ற நிலைக்குள்ளானோரையும் உற்சாகப் படுத்த அன்பு பெரிதும் உதவுகிறது. பகல் எல்லாம் உழைத்து அயர்ந்து போன மக்களிடம் தங்கள் கவலைகள் மறந்து துயில வேண்டிய நேரத்தில் கூட இன்புற்றுக் கொண்டு ஒரு ஜீவன் இருக்கின்றது என்றால் அது அன்பு வயப்பட்ட உள்ளமாகத் தான் இருக்க வேண்டும்.

இந்த உலகில் அன்பிலே முதல் நிலையைப் பெறுவது தாயன்புதான். தாயன்புக்கு இணையாக நாம் எந்த அன்பையும் எடுத்துக் காட்ட முடியாது. பாலூட்டித், தாலாட்டியதோடு அமுதூட்டும் பொழுது அன்பையும் சேர்த்து ஊட்டுபவள் தான் அன்னை. தாயன்புக்கு ஈடிணையில்லை என்பது தான் யாவரும் அறிந்தவுண்மை.

இந்த அன்பு இளந்தலை முறையினரிடையேயும், கணவன் மனைவிக்கிடையேயும் காதலாக மிளிர்கின்றது. காதல் வயப்பட்ட உள்ளங்களுக்கிடையே அன்பு வளர்ச்சியுற்று பூரண சில சமயங்களில் ஒருவரையொருவர் காணாது இரங்குகிறது, ஏங்குகிறது.

இந்த அன்பின் ஏக்கங்கள் இலக்கியங்களில் கூட பின்னிப் பிணைந்துள்ளன. மீரா கொண்ட கனவு, இளவரசன் சாஜகான் மும்தாஜ் மீது கொண்ட காதல் எல்லாம் அன்பின் உள்ளார்ந்த வெளிப்பாடுகளைச் சித்திரிக்கின்றன. காதலர்களிடையே உள்ள அன்புச் சின்னமாக தாஜ்மகால் விளங்குகிறது. இரு உள்ளங்களுக்கிடையே ஏற்பட்ட அன்பு காதலாக மாறி காதலனைக் காணாது ஏங்குகின்ற அவளது உள்ளம், எல்லா ஜீவன்களும் துயிலுகின்ற போதும் அவர் தம் உள்ளம் மட்டும் காதலன் மேல் வைத்த அதீத அன்பு காரணமாக தவித்துக் கொண்டிருக்கும்.

சங்கப் புலவர்கள் அன்பின் ஐந்திணையாக அன்பினால் ஏற்படுகின்ற உறவை வகைப்படுத்தி இருக்கின்றனர். அதாவது புணருதல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என வகைப்படுத்தி அன்பினால் ஏற்படுகின்ற உள்ளக் குமுறலின் வெளிப்பாடாக அன்பின் ஐந்திணையைக் காட்டியுள்ளனர். அது மட்டுமின்றி அன்புடையவர்களது நெஞ்சங்கள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாதவாறு கலந்திருக்கின்றது என்பதினை பின்வரும் பாடல் மூலம் சங்கப் புலவன் உணர்த்துகின்றான்.

''யாயும் ஞாயும் யாராகினரோ
எந்தையும் நுந்தையும் எவ்வழியறிதும்
நீயும் நானும் எம்முறைக்கேளிர்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்ததுவே''

அன்புடைய நெஞ்சங்களை பிரிக்க முடியாது என்பதற்கு செந்நிறம் கலந்த நீரை உவமையாகக் காட்டியிருக்கிறார்.

அன்பானது நட்பைவளர்க்கவும் உறவை வலுப்படுத்தவும் ஆதாரமாகின்றது. ஒருவரையொருவர் சந்திக்கும் போது கைகுலுக்குவதும், மேல் நாடுகளில் ஒருவலையொருவர் ஆரத்தழுவுவதும் அன்பின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. உறவுகளுக்கிடையே ஏற்படுகின்ற சொந்தமானது தெய்வ சொர்க்கமாக மிளிர்வதற்கு அன்பு தான் அடிப்படைக் காரணம்.

''அன்பு என்பது எம்மை ஆளவந்தது
சொந்தம் என்பது – தெய்வ
சொர்க்கம் ஆனது''

சொந்தங்களில் கூட அன்பு பின்னிப் பிணைந்திருப்பதை இப்பாடல் வலியுறுத்துகின்றது.


நாம் எல்லா உயிர்களிலும் அன்பு உள்ளவர்களாக இருத்தல் வேண்டும் என்பதனை எமக்கு உணர்த்துவதற்காகவும் அடியவர்கள் எல்லோரிடமும் இறைவன் அன்பு உள்ளவனாக இருக்கிறான் என்பதை உணர்த்துவதற்காகவும் இறைவனே பன்றிக் குட்டிகளுக்கு தாய்ப்பன்றியாக வந்து பால் கொடுத்ததும், செம்மனச் செல்விக்கு பிட்டுக்கு மண் சுமந்து உதவிய பொழுது, அவ்வேலையை சீராகச் செய்து முடிக்காததன் காரணமாக மன்னன் பிரம்பினால் முதகில் அடித்த பொழுது அவ்வடி எல்லா உயிர்களின் மேலும் விழுந்தது. இதன் மூலம் எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான் என்பதையும், நாமும் பிறவுயிர்கள் மேல் அன்பு உடையவராக இருக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது. அன்புள்ள ஒருவனாலேயே ''யாம் பெற்ற இன்பம் பெறுக! இவ் வையகம்!'' என்ற உயர்ந்த நிலையில் வாழமுடியும். திருமூலர் தமது பாடலிலே

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பேசிவமாய் அமர்ந்திருந்தாரே.''

அறிவில்லாதவர் அன்பையும் இறைவனையும் வேறுபடுத்திக் கூறுவார்கள். ஆனால் ''அனபே சிவம்'' அன்புதான் இறைவன். அன்புதான் இந்த உலகையே இயக்குகிறது என்பதை எமக்கு உணர்த்துகிறது. ஆண்டாள் திருமால் மேல் கொண்ட அளவுகடந்த அன்பு தெய்வீகக் காதலாகத் திகழ்கின்றது. இயேசுக்கிறித்துவும், ''உன்னைப் போல் உன் பிறத்தியானைநேசி'' என்று கூறி மானிட அன்பின் மகத்துவத்தைக் கூறியுள்ளார். இறைவன் அன்பு மயமானவன். அதனாலேயே மக்கள் சேவையே மகேஸ் வரன் சேவை ஆகிறது. ''அன்பு செய்வோம். அல்லல் நீங்கும் அல்லல் நீங்க அமைதி பெருகும். அன்பே வாழ்வின் வழி.''


# சிந்திக்கவும் சிரிக்கவும்

- தீபாவளிக்கும் பொங்கலிற்கும் என்னங்க வித்தியாசம்?
- தீபாவளி அன்று பொங்கல் சாப்பிடலாம் ஆனால் பொங்கல் அன்று தீபாவளியை சாப்பிட முடியாது.




- ஒரு கட்டடத்தின் 14ம் படியில் சந்தனம் பூசி இருந்தது. ஏன்?
- ஏனென்றால் அது மொட்டை மாடி.

- ஒரு அண்ணனும் தங்கச்சியும் ஓடி வருகின்றனர். அண்ணன் மேல்(male) மூச்சு வாங்குகிறான். தங்கச்சி?
- அவா பெண் மூச்சு வாங்குவா?



- எலிக்கு ஏன் வால் இருக்கு?
- அது இறந்து போனா தூக்கிப் போடுவதற்கு.

- ஒரு யானை வேகமாக கடைப்பக்கம் ஓடுகிறது, அது அங்கே என்ன வாங்கும்?
- மூச்சு வாங்கும்.



- ஒரு ஆங்கிலம் தெரிந்த மாடு, திரையரங்கு பக்கம் போகிறது. அங்கு சென்று கதவை கடிக்க ஆரம்பித்து விட்டது! ஏன்?
- ஏனென்றால் கதவில் "pull" என்று எழுதியுள்ளது.

- ஒரு மாமி இட்லியைத் தலையில் வைத்துள்ளார். ஏன்?
- ஏனென்றால் இட்லி பூ போல இருந்தது.

- ஒருவனின் யானை இறந்து விட்டது. அவன் அதை தொட்டு தொட்டு அழுதான். ஏன்?
- ஏனென்றால் அவனால் அதை கட்டிப்பிடிக்க முடியவில்லை.

செ. சர்மிளா

# இதயத்தில் வசிப்பவள்

நீங்கா உறவாய் நெஞ்சில் இருப்பவள்
நித்தம் நினைக்க வைப்பவள்!
பூங்கா வனமாய் பூத்துக் குழுங்குவாள்
என்னில் வசந்தம் தருபவள்!
தூங்க விடாது தூக்கம் கெடுப்பவள்
தினமும் கனவுகள் தருபவள்!
ஏங்கி என்னை வருந்த வைப்பவள்
எந்தன் மனதைப் பறித்தவள்!

இன்பமாய் என்னுடன் எங்கும் வருபவள்
எந்தன் மூச்சில் இருப்பவள்!
அன்னம் போலே மெல்ல நடப்பவள்
எந்தன் அன்பைப் பெற்றவள்!
தென்றலாய் என்னைத் தினமும் தொடுபவள்
இனிதாய் என்னுடன் கதைப்பவள்!
என்றும் மனதில் தேனாய் இனிப்பவள்
எந்தன் உயிரில் கலந்தவள்!

கவிதைகள் என்னை வடிக்க வைப்பவள்
கண்களால் என்னைக் கவர்ந்தவள்!
காவியம் புதிதாய் படைக்க வைப்பவள்
சிரித்து என்னை மயக்(கு)பவள்!
ஓவியம் போலே மனதில் இருப்பவள்
உடலுடன் உறைந்து போனவள்!
தேவியாய் எந்தன் வாழ்வில் நுழைந்தவள்
காதல் சொல்லித் தருபவள்!

சொந்தம் என்று எனக்கு இருப்பவள்
சோகம் தீர்த்து வைப்பவள்!
எந்தன் நெஞ்சம் முழுதும் ஆழ்பவள்
நேசம் என்னில் வைத்தவள்!
நொந்த என்னை தேற்ற நினைப்பவள்
மனதில் மலராய் மலர்பவள்!
இந்த வாழ்வில் பிடிப்பைத் தந்தவள்
இதயம் அதனில் வசிப்பவள்!

தாஸ்
(பழைய மாணவன்)

# இவ்வருட மாணவமணியில் இணைக்கப்பட்ட மணிகள்

எமது வாழ்வில் நாம் எத்தனையோ இன்பங்களை அனுபவித்திருக்கின்றோம். எத்தனையோ விதமான மனிதர்களைச் சந்திக்கின்றோம். ஆனால் இவைகள் எல்லாம் என்றும் எமது மனதில் நிலைத்திருப்பதில்லை. சில வருடங்களுக்கு பின்னால் அவை எமது நினைவுகளை விட்டுச் சென்றுவிடும். இளமைப்பருவத்தில் நாம் பாடசாலைகளில் கண்ட நண்பர்கள், ஆசிரியர்கள், அனுபவங்கள், சம்பவங்கள் என்றும் எமது மனதைக் கவர்ந்து கொண்டே இருக்கும். இந்த வகையில் எனது வாழ்க்கையில் எனக்கு கிடைத்த அருமையான இன்டம் தமிழ்க்கலைத் தொழில் நுட்பக்கல்லூரியில். எனக்கு கிடைத்த ஆசிரியரும் நண்பர்களையும் வர்ணிக்க இம்மடல் போதாது. ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான குணங்களாக இருந்தாலும், அவர்களுக்குள் இருக்கும் தமிழ்ப் பற்றும், ஒற்றுமையும் என்னைப் புகழ வைக்கின்றன. அவர்களுக்குள் எதாவது ஒரு திறமை பராட்டத்தக்கதாக அமைந்துள்ளது. இம்மாணிமாலையில் இணைந்துள்ள மணிகள் ஒவ்வொன்றையும் உங்களுக்கு அறிமுகஞ் செய்வதில் நான் பெருமைப்படுகிறேன். நீங்களும் அவர்களை பாராட்டுங்கள்.

இம்மணியின் முதல் மணியாம் சர்மிளா செல்வரட்னம், அடக்கமும் அமைதியும் நிறைந்த புத்திசாலிப் பெண்.

இம்மணிமாலையில் தொடுக்கப்படும் அடுத்த மணியாம் சிந்துயா ஜெயச்சந்திரன், நயாயத்தையும், நீதியையும் உயிர்மூச்சாகக் கொண்டு கடினமாக உழைப்பவர்.

அடுத்து கோர்க்கப்படும் மலராம் கரோலின் அந்தோனிப்பிள்ளை, பிறர் சிரிப்பே தனது சந்தோஷமாகக் கருதி, சிரிக்கவைக்கும் நகைச்சுவை நாயகி.

இந்த இதழோடு இணைக்கப்படும் இன்னொரு இதழாம் நிலோஜினி துரைராஜா, மௌனத்தின் பொழுதுகளில் மௌனமாகவும், புயலாக வேண்டிய வேளையில் புயலாகவும் தோன்றுவார்.

இம்மாணவமணிக்கு கைகொடுத்த அடுத்த தோழன், பகீரதன் சர்வானந்தன் அமைதியின் இருப்பிடம்.

இம்மாணவமணிக்கு உயிர்கொடுத்த மாணவன் ரகுலேந்திரன் முத்துராஜா, வயதுக்கு மிஞ்சிய அறிவும், ஆற்றலும் கொண்டுலுள்ளவர் மட்டுமல்லாமல், தேன்மதுரத் தமிழோசை உலகெலாம் பரப்பப்பட வேண்டும், என்ற இலட்சியத்துடன் உழைக்கும் ஒரு கவிஞன்.

இம்மலரில் நறுமணம் வீசும் மலராம் தயாளினி தனிகாசலம், பெண்மைக்குரிய நாற்குணங்களையும் கொண்ட ஓர் மௌனப் பூ .

இம்மணிக்கு கலையுருவம் கொடுத்த கவின்கலை அரசியாம் சங்கீதா திவ்யராஜா. இவ்வுலகுக்கு கலைவாணியே மறுவுருவத்தில் வந்த முத்தமிழிலும் திறமையுள்ள சகலகலாவல்லி.

இம்மணி மாலையின் அடுத்த மணியாம் அகிலன் சுந்தரலிங்கம், பெண்கள் தான் அமைதியாக இருக்க வேண்டும், என்று நினைக்கும் இந்தக் காலத்தில் பெண்களுக்கே அமைதியைக் கற்றுக் கொடுத்த அடக்கமான ஆண்மகன்.

இம்மணிக்கு ஓசையைக் கொடுத்த ஒரு புரட்சிக் கவிஞனாம் துஷ்யந்தன் பாலகிஷ்ணன், ஒரு சிறந்த நண்பன். இவனை இவனுக்கு இவன் கவிதைகள் அறிமுகம் செய்து வைத்தன. அவன் கவிதைகளே அவனை எமக்கு அறிமுகம் செய்து வைத்தன.

இம்மணிகளை தொடுத்து வைக்கும் கயிறாம் சுஜீதன் கரிச்சந்திரன் அமைதியாக இருந்தாலும், விடாமுயற்சியைத் தனது கொள்கையாகக் கொண்டு உழைக்கும் ஒரு மாணவன்.

இம்மணிக்கு உணர்ச்சியைக் கொடுத்த மாணவியாம் அனோத்தா கிற்லர், பெண்களை அடிமைத்தனமாக வைத்திருக்கும் சமுதாயத்தின் மத்தியில், பெண் சுதந்திரத்திற்காகப் போராடும் ஓரு புரட்சிப் பெண்.

இம்மணிக்கு ஓசையைக் கொடுக்கின்ற குயிலாம் சைலையா கணேசலிங்கம், கடமையே கண்ணாகக் கொண்டும், இசையைத் தனது உயிர் மூச்சாகக் கருதும் ஓரு சிறந்த பெண் குயில்.

இம்மனிக்கு சித்திரம் தீட்டிய ஓர் மாணவியாம் சங்கீதா தனநாயகம், 20ம் நூற்றாண்டிலும், இலக்கியத்தை கண்ணாகப் போற்றி. கவிதைகள், கட்டுரைகள், கதைகள் போன்றவற்றை புதிய படைப்புக்களில் படைக்கும் ஒரு மாணவி.

இம் மாணவமணியை உருவாக்கக் கைகொடுத்த தோழி கதாரிணி நகுலேசப்பிள்ளை. சிரித்த முகத்துடன் கலகலப்பாகப் பழகுசுபாவத்தால் இவர் எல்லோர் மனதிலும் இலகுவாக இடம் பிடித்து விடுவார். எமது எதிர் காலவாழ்கை எப்படி அமையும் என்பதை முன்னே சிந்தித்து அதற்கேற்றவாறு தானும் செயற்பட்டு மற்றவர்களையும் செயற்படுத்தும் விவேகமான பெண். மொத்தமாக இவர் ஒரு கனியைப் போல்வார்.

இம்மாணவமணியில் சிதைந்து கிடந்த முத்துக்களை செந்தமிழால் ஒன்றிணைத்த இன்றைய கவிஞனாம் ரதீஸ்குமார் யோசப். இவர் வாயால் பேசினாலும். கையால் எழுதினாலும் பிறர் காதுகளுக்கும் கண்களுக்கும் புலப்படுவது செந்தமிழில் வடிக்கப்பட்ட புதிய கவிதைகள். இவர் பேச ஆரம்பித்தால் பிறர் பேசாத அளவிற்கு தமிழ்த் திறமையுடைய மாணவன்.

இம்மாணவமணிக்கு சித்திரம் தீட்டிய ஓர் மாணவவி பிரபாலினி சந்திரகுமார், படிப்பிலும், விவேகத்திலும் சுறுசுறுப்பானவர். கொடுக்கப்பட்ட வேலைகளை நேரத்திற்கு கச்சிதமாக முடிக்கும் மாணவி. வகுப்பில் சிறியவராக இருந்தாலும், அறிவில் உயர்ந்தவர். மொத்தத்தில் எல்லோர் மனதையும் கவர்ந்தவர்.

இம் மாணவமணியில் இணைந்துகொள்ளும் அடுத்த மணியாம் பானு வெற்றிவேல், இசைக்குள் இனியது மழலையின் பேச்சு, ஆனால் பானுவின் பேச்சு மழலையிலும் இனிமையானது. பேச்சில் மட்டுமல்ல, இவர் குணத்திலும் ஒரு குழந்தை தான்.

இம் மாணவமணியில் இணைந்து கொள்ளும் அடுத்த மணி நிர்மலானந்தம் சந்திரகுமார். கனடாவில் வாழ்ந்தாலும் தமிழ் பண்பாட்டுடன் வாழவேண்டும் என்பதற்கு இவர் ஒரு சிறந்த உதாரணம். வாழ்கையில் முன்னேற வேண்டும் என்பதற்காகக் கடினமாக உழைக்கும் ஒரு மாணவன்.

இம்மாணவமணியல் இணைக்கப்படும் அடுத்த மலராம் சுதர்சினி வேலும்மயிலும். கேட்டதை மறுக்காமல் கொடுக்கும் ஒரு வள்ளல். பிறர் இன்பமாக வாழ்ந்தாலே தான், தான் இன்பமாக வாழமுடியும் என்ற உறுதியுடனும், தன்னம்பிக்கையுடனும் வாழும் தமிழ்ப் பெண்.

இம்மாலையில் சேர்க்கப்படும், அடுத்த மலராம் தர்சினி வெற்றிவேல். அமைதிக்கும், அடக்கத்திற்கும், அறிவுக்கும் பிறப்பிடம் எங்கள் தர்சினி. சூரியன் என்றும் எமக்கு ஒளியைத் தருவதுபோல், இவர் செல்லப் புன்னகை எல்லோர் மனதிலும் ஒரு வெளிச்சத்தைத் தரும்.

இம்மனிக்கு சித்திரம் தீட்டிய ஓர் மாணவியாம் சுஜீவா செல்வராஜா, இவர் ஒரு நல்ல கவிஞன் மட்டும் அல்ல, ஓர் சிறந்த நடிகையும் தான். அமைதியாக இருந்தாலும் கொடுத்த பாத்திரத்தை கடமையுணர்வுடன் செய்து முடிக்கும் திறமையுள்ள மாணவி.

இம்மாணவமணிக்கு கைகொடுத்த மாணவனாம் இரட்னசிவம் கதிரமலை, நல்ல காரியங்களில் பங்கெடுத்து தலைமை தாங்கும் திறமை. கேட்காமலே மற்றவர்களுக்கு உதவி புரியும் ஒரு மாணவன்.

இம்மாணவமணியில் இணைக்கப்டும் அடுத்த மலராம் கஜேந்தினி செல்வராஜா. அன்பும் பண்பும் அடக்கமும் அமைதியும் நிறைந்த பெண். கனடாவில் ஓர் அபூர்பமான பெண்.

இம்மாணவமணியில் இணைக்கப்படும் அடுத்த மணியாம் தமேஸ் தியாகராஜா, வகுப்பில் அமைதியாக இருந்தாலும், நகைச்சுவையுடன் பேசி எல்லோரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் மாணவன். மொத்தமாக எல்லோரும் விரும்பும் மாணவன்.

இம்மலருக்காக அயராது உழைத்து தனது சக்தியைக் கொடுத்த மலராம் பிரியா கிறிஸ்ரியன். பரதத்தை உயிராகவும், கல்வியைக் கண்ணாகவும், கடமை கண்ணியம் என்ற பொறுப்புணர்ச்சியுடன் கொடுத்த வேலைகளை நேரத்துக்குள் சரியாக முடிக்கும் மாணவி. இவரின் விடாமுயற்சியும், அயராத உழைப்பும், திறமையும் என்று இவருக்கு வெற்றியைக் கொடுக்க எமது வாழ்த்துக்கள்.

மாணவர் செயலர் துசிதா பத்மநாதன். கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் உழைத்து தமிழில் வளரும் தமிழ்ப்பெண். நேரந்தவறாமை இவரது அணி.

**ஆக்கம்: துசிதா பத்மநாதன்**
**உதவி: ரதீஸ், கதாரிணி**

# கவின் கலைகளுள் இசையின் மகிமை

ஸ, ரி, க, ம, ப, த, நி, என்ற ஏழு சுரங்களிலும் அம்பாள் உறைந்திருப்பதாக நம் சாஸ்த்திரம் கூறுகின்றது. இசை இன்று யாருக்கும் உரிய ஒரு பொதுச் சொத்தாகக் கருதப்படுகிறது. எவ்வித வேறுபாடுமின்றி ஆர்வமுள்ள ஆற்றல் உள்ள அனைவரும் இசையை இன்று கற்க முடிகிறது. சங்கீதம் என்பது கற்காமலே இயற்கை ஞானத்தால் பாட முடியும். ஆனால் ஒரு நல்ல குருவிடம் சென்று முறைப்படி கற்கும் போதே அவனது குரல் மேலும் பண்பும், மெருகும் அடைகின்றது.

இன்று கர்நாடக இசையை மேடைக் கச்சேரிகளில் பாடும்போது அதைக் கேட்டு இரசிக்கும் இரசிகர்களை விட அதே பாடல்களை ஒலி இழை நாடாவில் கேட்டு இரசிக்கும் இரசிகர்களே அதிகமாக உள்ளனர். பாரம்பரிய சங்கீதத்தை மணித்தியாலக் கணக்கில் இருந்து இரசிக்கும் இரசிகர்களும் குறைந்து விட்டார்கள். அவர்களுக்காகத் தம்மை மாற்றியமைக்கக் கூடிய வித்துவான்களும் குறைந்து காணப்படுகின்றனர்.

பாடகர்களும் திருப்திப்பட்டு, இசை இரசிகர்களையும் திருப்திப்படுத்த வேண்டுமானால் இரசிகர்களுக்குப் புரிந்த மொழியிலே இசைக் கச்சேரிகள் நடத்த வேண்டுமென்பதே இரசிகர்களின் வேண்டுகோள். தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இந்தியக் கலைஞர்களிடமிருந்து பெற்ற இசையறிவைக் கொண்டு எமது மொழிகளில் எமது மக்களுக்குப் புரியும் வகையில் பாடல்களை நாம் இயற்றி இசையமைத்துப் பாடும் பாடல்களையே மக்கள் கூடுதலாக வரவேற்கிறார்கள். ஆனால் இசைபற்றி ஆழமாக அறிந்தோர் மட்டுமே "இசைக்கு மொழி இல்லை" என்பது போல் எந்த நாட்டு இசையையும் எந்த மொழி இசையையும் இரசிப்பார்கள் என்பது உண்மை.

பௌதிகம், விஞ்ஞானம் முதலிய கலைகளின் நுட்பங்கள் வளர்ச்சியடைவதைப் போல் இசைக்கலை நுட்பங்களும் வளர்ச்சி அடைந்துள்ளன. எமது முன்னோர்கள் தங்களுக்குப் பழக்கத்தில் இல்லாத சில இராகங்களைப் பாடிப்பாடிப் பழக்கத்திற்குக் கொண்டு வந்தனர். பழமையே கையாண்டு புதியதைத் தொடராமலிருந்தால் கலைகள் காலத்திற்கேற்ப வளர்ச்சியடையாது அவ்வப் போது புதிய தண்ணீர் பாயாத குளத்தைப் போல் கலையும் தேக்கமடைந்து வற்றிப் போய்விடும் என்று அமரர் கல்கி அவர்கள் கூறியிருந்தார்.

இந்த வகையில் எமது தமிழ்க்கலை தொழில் நுட்பக்கல்லூரி ஆரம்பித்து, இந்த வருடம் 6வது ஆண்டு பூர்த்தியாகி வெற்றி நடைபோடுவது எமக்குப் பெருமையளிக்கிறது. குரல் இல்லாதவனுக்கு விரல் என்பது போல் வாய்ப்பாட்டு இசையுடன் வாத்திய இசையும், நடனக்கலையும் அனுபவமுள்ள தரமான ஆசிரியர்களைக் கொண்டு எங்கள் கல்லூரி நடைபெறுவதுடன் தமிழர் தம் கலைகள் கனடியத் தமிழரிடையே நிலைத்து நிற்கவும் வாய்ப்புண்டு. அதற்கு உலகத்தமிழர் இயக்கம் வழிவகுத்துள்ளது என்பதனைக் கூறி மேலும் தரமுள்ள ஆசிரியர்களையும், ஆர்வமுள்ள மாணவர்களையும் எங்களுடன் இணையுமாறு வருக வருக என வரவேற்று எனது சக ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கல்லூரிப் பொறுப்பாளர் அனைவருக்கும் எனது மனமுவந்த வாழ்த்துக்களைக் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி.

அன்புடன்

திருமதி. வி. சீனிவாசகம்
பொறுப்பாளர் - கவின்கலை



**OAC** வகுப்பில் தமிழ்மொழியினைக் கற்கும் மாணவர்களும் ஆசிரியர் திரு. பொன். விவேகானந்தனும்



**OAC** வகுப்பில் தமிழ்மொழியினைக் கற்கும் மாணவர்களும் ஆசிரியர் திரு. அ. அன்ரனும்

# தமிழ்மொழி, பண்பாட்டுத்துறைப் பொறுப்பாளர் நோக்கில்

தமிழ்மொழித்துறையின் தனிவளர்ச்சியை இரண்டாம் இதழான மாணவமணி மூலம் தருவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். தமிழ் கனடாவில் தழைத்தோங்கி நிற்கத் தம்மூச்செனக் கொள்ளும் உலகத் தமிழர் இயக்கப் பணியில், தமிழ்க்கலை- தொழில்நுட்பக் கல்லூரியினர் தமிழர்களுக்கான ஒரு கல்லூரி அமைக்க முயலும் இவ்வேளை, அது மாணவமணியின் ஒலியாகி இதயத்தில் இன்பத் தமிழ் தேனாக இனிக்கின்றது.

எமது கல்லூரியினர் தமிழ்மொழி வளர்ச்சியில் கடந்த ஆண்டை விடப் பல்வேறு வழிகளிலும் வளர்ச்சி அடைந்துள்ளனர். எமக்கு ஆதரவு தந்து, தமிழ் மொழியைச் சிறப்புச் சித்திப் பாடமாக நாங்கள் பல தரங்களில் கற்பிக்க வழிவகுத்த, “மெற்றோ பொலிற்றன் பிரத்தியேகக் கல்விச் சபை (MSSB)” க்கு நன்றி கூறுவது மட்டுமன்றி, பல்வேறு கல்விச் சபைகளோடும் தமிழ்மொழிக் கற்கைநெறி பற்றிக் கலந்துரையாடியுள்ளோம். தமிழ்மொழிக்கான தகுந்த கலைத்திட்டம் அமைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளோம்.

எமது தமிழ்மொழி வகுப்புக்கள் தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரியின் கிளைகளான ஸ்காபறோ வளாகம், லான்ஸ்டவுண் வளாகம், வெலஸ்லி-பார்ளிமென்ற் வளாகம் ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன. ஐந்நூறுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பிள்ளைகள் தமிழ்மொழியை பாலர் பிரிவு முதல் ஒன்ராரியோ அக்கடமிக் தராதரப்பத்திர வகுப்பு (OAC) வரை கற்கிறார்கள். இங்கு அநுபவம் வாய்ந்த முப்பத்தைந்து தொண்டர் தமிழ் ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். இவர்களின் பல்துறை அநுபவம், ஆற்றல், மொழிவளம் கற்கும் பிள்ளைகளுக்கு மிகவும் உதவுகின்றன.

எமது தமிழ்மொழி ஆசிரியர்கள் சேவையில் பயிற்சி பெற பல்வேறு கற்றல் கற்பித்தல் வகுப்புகள் நடாத்தியுள்ளோம். மேலும் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலுக்கான கருத்தரங்கில் கனடாவாழ் கல்விமான்கள், மொழிவல்லுநர்கள், கற்பிக்கும் ஆசிரியர்கள், ரொறன்ரோ கல்விச்சபையைச் சேர்ந்த பல்வேறு ஆசிரியர்களும் பங்கு கொண்டு, தத்தமது கருத்துக்களைக் கூறி, செயலமர்வுகளிலும் ஈடுபட்டனர். ஈற்றிலே வினாக்கொத்து மூலம் கருத்துக் கணிப்புப் பெற்று, இம்முறை ஜூலை 24ம், 25ம் திகதிகளில் நடைபெறவுள்ள ஆசிரியர் கருத்தரங்கிற்குப் பயன்படும் சிபாரிசுகள் சீரமைவு பெறுகின்றன.

எமது நிலையப் பொறுப்பாளர் சுப்பிரமணியம் இராசரத்தினம் உடனிருந்து ஆற்றும் தொண்டு தமிழ்மொழிக்கற்கை நெறிகளை மேற்படுத்துகின்றது. தமிழ் நாடக இயக்குநராக, கலைத்திட்ட அமைப்பை ஊக்குவிப்பவராக, ஒன்றுகூடலில் மாணவராகவும்-பெற்றோராகவும், வகுப்புகள் நடத்துவதில் இணைப்பாளராகவும் கடமையாற்றி எமக்கெல்லாம் உந்து சக்தியாகிறார். அவரது அயராத முயற்சியால் ஏற்படும் தமிழ்மொழி பயிற்சிப் புத்தகங்கள் மிகமிகச் சிறந்தவை. அவற்றை ஒவ்வொரு அடுத்த வெளியீட்டிலும் சிறப்புடன் தரம்மிக வெளியிடுவதில் நாமெல்லாம் பெருமையடைகின்றோம்.

எமது தமிழ்ப் பிரிவுடன் மற்றைய பிரிவினர் ஒன்றிணைந்து வழங்கும் தமிழ்மொழி விழாக்கள், கவின்கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், பட்டிமன்றங்கள் எங்கள் மாணவர்களை, மாணவமணிகளாக்கி பெற்றோரும், மற்றோரும், கற்றோரும் தமிழ்க்கலைக் கல்லூரியை புகழ வைக்கின்றன.


இம்முறை குடும்ப வரலாற்றுச் செயற்றிட்டம், தமிழீழச் செயற்றிட்டம், எமது புத்தகம் என்ற செயற்றிட்டம் மாணவர்களால் ஆக்கப்பட்டன. இவை உள்ளக மதிப்பீடு, பிறமதிப்பீடு என்பனவற்றால் கணிக்கப்பட்டு, பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இவற்றால் குடும்பத்தின், தமிழீழத்தின் பசுமை நினைவுகள் மாணவமணியின் ஒலியாகி, உள்ளொளி பெருக்கி, நாதமாய் நந்தமிழ் பிள்ளைகளில் நிலை கொள்கின்றது.

தமிழ்மொழிக்கற்கை நெறிக்கு நிர்வாகப் பொறுப்பாளராக வெலஸ்லி/பார்ளிமென்றுக்கு திருமதி. மகேஸ்வரி கனகலிங்கமும், லாண்ஸ்டவுண் வளாகத்திற்கு செல்வி. ஐறீன் கோபனும், வின்ஸ்ரன் சேர்ச்சில் கல்லூரிக்கு திருமதி. சரஸ்வதி சின்னத்தம்பி, திருமதி. தவமலர் சிவானந்தனும், OAC தமிழ் வகுப்புகளுக்கு திரு. ச. நாகேந்திரன், திருமதி. துசியந்தி பாலமோகன் ஆகியோரும் செயல்படுகின்றனர்.


மேலும் சிறக்க வேண்டும் என்ற எண்ணமுடைய எல்லாத் தொண்டர்களின் எண்ணவாக்கு, செயல் இசைவுபடச் செயலாற்றும் மனப்பாங்கு என்பன எம் தமிழ்மொழிப் பிரிவை வளர்க்கும் தமிழன்னை கனடாவில் வளர்கிறாள்; வாழ்வாள்.

நன்றி!

அன்புடன்
பண்டிதர் ம. செ. அலெக்ஸ்சாந்தர்
பொறுப்பாளர் - தமிழ்மொழி, பண்பாட்டுத்துறை



வின்ஸ்ரன் சேர்ச்சில் கல்லூரியில் தமிழ் கற்கும் பாலர் பிரிவு மாணவர்களுடன் ஆசிரியர்கள் திருமதி. ச. சுதேந்திரன், திருமதி இ. சிவலோகநாதன்



வின்ஸ்ரன் சேர்ச்சில் கல்லூரி வகுப்பறையில் ஆசிரியர்களுடன் தமிழ் கற்கும் மாணவர்கள்

## மின்கணனித் துறை பொறுப்பாளர் உங்களோடு..

ஆறாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் எமது கல்விக் கூடத்தின் ஆண்டு விழாவின்போது வெளிவர இருக்கும் இம் மலரில் மின்கணனித் துறைபற்றி உங்கள் எல்லோருடனும் எமது ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் ஈழத்தில் இருந்து புலம் பெயர்ந்து கனடா நாட்டில் குடியேறியுள்ள எம்மினத்தவர்கள் மின்கணனித் துறையிலும் மிக்க அறிவு பெற்று நன்கு சிறப்புடன் விளங்குகின்றனர். பல தரப்பட்ட தமிழ் எழுத்துக்களை வடிவமைத்தும் உள்ளனர். எமது கல்லூரியில் கல்வி கற்ற பல இளம் தலைமுறையினர் கணனித்துறையில் பல்கலைக்கழகங்களில் முதல்தர மாணவர்களாக விளங்குவதோடு, பலர் அத்துறையில் உயர் பதவிகளையும் வகிக்கின்றனர். இவைகள் எல்லாம் எமக்கும் பெருமை சேர்க்கின்றன.

எமது கல்விக்கூடம் இலாபநோக்கற்ற அமைப்பாகும். புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு உலகத்தமிழர் இயக்கம் மின்கணனித் துறையை ஆரம்பத் துறையாக ஆரம்பித்து வைத்தது. 1990ம் ஆண்டு 5 மின்கணனிகளுடன் தமிழீழச்சங்க பணி மனையில் ஆரம்பிக்கப்பட்ட கணனி வகுப்புக்கள் 1996 புரட்டாதி 16ம் நாள் தனக்கென ஒரு தலைமைக் காரியாலத்தையும் நவீன வசதிகளைக் கொண்ட மின் கணனி வகுப்பறையையும் தனதாக்கிக் கொண்டது. 6வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இவ்வாண்டில் பாவனையிலுள்ள 71 மின்கணனிகளுடன், புதிதாக மேலும் 22 மின்கணனிகள் வாங்கியுள்ளோம்.

ஒரு சில கணனி வகுப்புகளுடன் ஆரம்பித்த எமது கல்லூரி இன்று காலத்தின் தேவைக்கேற்ப புதிய பல துறைகளை ஆரம்பித்து வளர்ச்சியடைந்து வருகின்றது. தற்போது JAVA, M.C.S.E., UNIX, C Language Basic, C++, Visual Basic, C.A.T.S., A+ போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட Office Assistant Certificate Program இல் இதுவரை காலமும் அறுபது மாணவர்கள் வரை பயிற்சி முடித்து, பலர் அத்துறையில் வேலைவாய்ப்பும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகுப்பை மற்றைய வளாகங்களிலும் மிகவிரைவில் விரிவாக்கம் செய்யவுள்ளோம். மிகவிரைவில் ORACLE என்னும் கணனி வகுப்பையும் அறிமுகம் செய்யவுள்ளோம்.


எமது கல்விக் கூடத்திற்கென WEBSITE உருவாக்கியுள்ளோம். இது WWW.ATAT.ORG என்ற பெயரில் உள்ளது. இந்த INTERNET மூலம் இங்கே ஆரம்பமாகவுள்ள புதிய பாடங்களையும், பாடவிதானங்களையும், கல்லூரியின் நடவடிக்கைகளையும் அறியக் கூடியதாக இருக்கும்.

எமது கல்லூரியின் கணனி படிப்பிக்கும் படிமுறைகள் எம்மவர்களை மட்டுமல்லாது மற்றைய சமூகத்தவரையும் கவர்ந்துள்ளமையால் அவர்களும் இக்கணனி வகுப்புக்களில் சேர்ந்து கல்வி கற்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

மாணவர்கள் மின்கணனி வகுப்புக்கென செலுத்தும் பணத்தில் ஒரு பகுதி மீளவும் மாணவர் சமுதாயத்துக்கே பயன் படக் கூடிய வகையில் செயற்பட்டு வருகின்றோம் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். பெற்றோர்கள் மாணவர்களாகிய உங்கள் எல்லோரினது ஒத்துழைப்புடனும் ஆசிரியர்களது தன்னலமற்ற சேவையினாலும் கல்லூரி மேலும் வளர்ந்து கனேடிய தமிழ்ச் சமுதாயத்துக்கு என ஒரு நிலையான கல்லூரியை உருவாக்க வேண்டும் என்ற எமது இலட்சியத்தை நோக்கி நடைபோடுவோம்.

நன்றி!

அன்புடன்
செல்வத்துரை சந்நிதிவேல்
பொறுப்பாளர்-மின்கணனித்துறை



நடனம் பயிலும் மாணவர்களுடன் ஆசிரியர் திருமதி. நிரோதினி பரராஜசிங்கம்



வயலின் கற்கும் மாணவர்களுடன் ஆசிரியர் திருமதி. விஜயலட்சுமி சீனிவாசகமும் உதவி ஆசிரியர் செல்வி குணரட்னமும்.

# மண்ணும், மொழியும் எங்கள் முகவரி

தமிழ்மக்கள் சந்தர்ப்பவசத்தால் மண்ணைப் பிரிந்தாலும், மறுபடியும் சேருவோம் என்ற நம்பிக்கையுடன் வாழும் நாம், மொழியைப் பிரியாது முழுமையாக அதனுடனேயே வாழ வேண்டும். திக்கெட்டும் பரவி திறம்பட பல மொழி பேசினாலும் தமிழனின் தாய்மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டும். அந்த வகையில் சிந்தித்த சிலரின் செயற்பாட்டினால் எமது கல்விக்கூடம் 1996ம் ஆண்டு வைகாசி மாதம் ரோஸ் வீதி சமூக மன்றில் ஆரம்பிக்கப்பட்டது. பதினைந்து மாதங்கள் பெற்றோர்களாலும், தொண்டர்களாலும் திறம்பட நிர்வகிக்கப்பட்டு, 1997 ஆடி மாதம் அனைத்து மாணவர்களதும் திறமைகள் கலைநிகழ்ச்சி வடிவமாக வெளிக் கொணரப்பட்டது ஒரு சிறப்பம்சமாகும்.

இச்சமூகமன்றம் வெலஸ்லி பாராளுமன்ற மையப்பகுதியில் அமைந்துள்ளது. இங்கு ஏராளமான தமிழ்ப் பெற்றோர்களும், சிறார்களும் வசிப்பது யாவரும் அறிந்ததே. இங்கு வாழும் தமிழ்ச்சிறார்களின் மொழிவளத்தை மேன்மேலும் வளர்த்து சகல விதத்திலும் மேன்மை பெற்ற ஒரு தமிழ்ச் சமூகத்தை உருவாக்கும் நோக்கமாகவும், ஒரு ஒன்றுபட்ட தலைமையின் கீழ் இயங்கி உயர்ச்சி அடைவதற்காகவும் எமது கல்விக்கூடம் 1997ம் ஆண்டு புரட்டாதி மாதத்திலிருந்து தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரியின் தலைமையின் கீழ் இயங்க ஆரம்பித்தது.

இக்கல்விக்கூடம் 1996ல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 1998 பங்குனி மாதம் வரை ரோஸ் வீதி சமூக மன்றில் மூன்று அறைகளுக்குள் முடங்கிய நிலையில் ஏறக்குறைய 120 மாணவர்களுடன் மிகவும் வசதி குறைந்த நிலையிலும் தொண்டர்களின் விடாமுயற்சிக்கு ஒரு சவாலாக இருந்து சிறார்களின் மனதில் தமிழைப் பதிப்பதில் மிகவும் அக்கறையாக இருந்தது. இந்த இடத்தில் பெற்றோர்களின் ஒத்துழைப்பும், சில முதியவர்களின் தொண்டர் சேவையும் குறிப்பிடப்பட வேண்டியதும், நன்றி கூறப்பட வேண்டியதுமாகும்.

1998 பங்குனி மாதக் கடைசியிலிருந்து இந்த ரோஸ் வீதி சமூக மன்றில் 3 அறைகளுடன், வின்செஸ்ரர் பாடசாலையில் 6 அறைகளும் பெறப்பட்டு, பிள்ளைகள் படிப்பதற்கு ஏற்ற சூழலில் ஆரம்பப்பிரிவு முதல் 9ம் வகுப்பு வரை நடைபெற்று வருகின்றன. இந்த வகுப்புகளை ஒழுங்கு செய்தவர்கள் முதற்கொண்டு, வகுப்புகள் ஒழுங்காகவும், சிறப்பாகவும் நடத்த ஒத்துழைக்கும் தொண்டர் ஆசிரியர்கள் வரை அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரியின் கிளையான இவ்வளாகம் வெலஸ்லி பாராளுமன்ற வளாகமாக செயற்படுகின்றது. இதன்பின் 1997 மார்கழி மாதம் நடந்த நத்தார் விழாவில் எமது மாணவர்கள் மற்றைய வளாக மாணவர்களுடன் இணைந்து தமது திறமையை "பாட்டி சுட்ட வடை" என்ற இசையும் அசைவும் நிகழ்ச்சி மூலம் காண்பித்தார்கள். தொடர்ந்து 1998 பங்குனி மாதம் நடந்த கல்லூரி ஒன்றுகூடலில் எமது மாணவர்கள் "வசந்தகாலம்" என்ற குழுப்பாட்டு, "கம்பனும் கனேடிய இளைஞர்களும்" என்ற நாடகம், "அன்னை மண்ணோடு" என்ற கவிதா நிகழ்வு என்பவற்றின் மூலம் தமது திறமைகளை ஆர்வத்துடன் வெளிக்கொணர்ந்ததை அனைவருமே பாராட்டினார்கள்.

இவ்வளாகத்தில் 13 தொண்டர் ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றோம். மேலும் இந்த அமைப்பின் கீழ் எமது பாடசாலைச் சிறார்களின் தமிழ்மொழி அறிவு மென்மேலும் வளர வேண்டுமென்பதே இங்கு கடமை புரியும் எம்மவர்கள் ஒவ்வொருவரதும் விருப்பமாகும். நாம் தமிழ் இனம் என்ற எண்ணமும், இனஒற்றுமையும், பலமும் ஏற்பட வேண்டும். அதற்கு இக்கல்லூரி உறுதுணையாக இருக்கும் என்ற எண்ணத்துடனும், இந்தக்கிளை தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி என்ற தாய் நிறுவனத்துடன் ஐக்கியமாகி மென்மேலும் உறுதிப்படும் என்ற நம்பிக்கையுடனும் விடைபெறுகின்றேன்.

நன்றி!

அன்புடன்
திருமதி. மகேஸ்வரி கனகலிங்கம்
வெலஸ்லி-பாராளுமன்ற வளாகம்
ஆனி 1998



லான்ஸ்டவுண் வளாகத்தில் தமிழ் மேற்பிரிவு (கீழ்த்தரம், இடைத்தரம்) மாணவர்களுடன் ஆசிரியர்கள் திருமதி. விஜயலஷ்மி பூபாலசிங்கம், திருமதி. கௌரி கனகரட்ணம்



லான்ஸ்டவுண் வளாகத்தில் தமிழ் கீழ்த்தரம் பிரிவு மாணவர்களுடன் ஆசிரியர்கள் திரு. பட்டன் அழகர்சாமி, திரு. பெனடிக்ற் பேதுருப்பிள்ளை

**WITH BEST COMPLIMENTS FROM**


தங்கத்தை மலிவுக்கு எதிர்பார்ப்பவர்களின் தரம் ஒரு ரகம்
தங்கத்தை மலிவாக தருபவர்களின் தரம் ஒருவகைத் தரம்
தங்கத்தை தரமாகத் தரவேண்டும் என்பவர்கள் ஒரு திறமான ரகம்
தங்கத்தை தரமாகவும் திறமாகவும் தூய்மையாகவும் தருபவர்கள்தான் சிறந்த ரகம்
இந்தவகையில் "ஸ்ரீசிவா" உயர்ந்த ரகம்.......

செந்தமிழ் மக்களின் சிறப்புகள் கோடி
சிறந்துண்டு வாழ்ந்த நினைவுகள் கோடி
சிந்து வழி வந்தநம் சீர்பொற் காவிய
சுந்தர நகைகள் சுயம்பல கோடி
சேருமா வாழ்விலே என்று நம் தமிழர்
ஸ்ரீசிவா இருக்கையில் ஏங்கிடலாமா.


# ஸ்ரீசிவா ஜுவலரி

**721 BLOOR STREET WEST, TORONTO,**

**Tel.: (416) 531-4867**




நடன ஆசிரியர் திருமதி. கிருபாநிதி இரத்தினேஸ்வரனும் மாணவர்களும்



இசை வகுப்பில் (வாய்ப்பாட்டு) பயிலும் மாணவர்களுடன் ஆசிரியர்கள் திருமதி. பிரேமா சிறிஸ்கந்தராஜா, திருமதி. விஜயலட்சுமி சீனிவாசகம்

# SAI AUTO SERVICE
# சாயி ஓட்டோ சேர்விஸ்

குறைந்த
விலை



நிறைந்த
திருப்தி


உங்கள் வாகனங்கள் எதுவாக இருந்தாலும் குறைந்த
செலவில் மனநிறைவாக திருத்திக் கொடுக்கப்படும்

முன்னாள் சாவகச்சேரி பொன்னம்பலம் Garage
உரிமையாளரும், 30வருட அனுபவமிக்க தொழில்நுட்ப
வல்லுனருமான பொன்னம்பலம்
அவர்களின் மேற்பார்வையில்...

பிரத்தியேக பயிற்சி பெற்ற தொழில்நுட்ப
வல்லுனர்களால் Japanese & Domestic
வாகனங்கள் திருத்திக் கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு
**பொன்னம்பலம்**

**(416) 285 9943**




**235 Midwest Road (Rear of the Building) Scarborough**



வெலஸ்லி & பார்ளிமென்ரில் கல்வி கற்கும் தமிழ்மொழி மத்திய பிரிவு மாணவர்களுடன் ஆசிரியர் திருமதி. சரோஜினி வேலாயுதம்பிள்ளை




வெலஸ்லி & பார்ளிமென்ரில் கல்வி கற்கும் தமிழ்மொழி மத்திய பிரிவு மாணவர்களுடன் ஆசிரியர் திருமதி. சரோஜா சண்முகம்

PORTELLO



CHILL THE PORTELLO BOTTLE

to see a secret message appear on the COLD-O-METER



**IT'S WHERE IT'S AT**

Portello Beverages welcomes your comments at (416) 293-6555 or info@portello.com. Get your website linked free at www.portello.com.

போர்ட்டெலோ

*For trade inquiries to USA please call*
**(416) 293-6555**
*or fax*
**(416) 293-6459**



பியானோ கீபோட் வகுப்பில் பயிலும் மாணவர்கள் சிலரும் ஆசிரியர் திருமதி. ஜோய் சாந்திக்குமாரும், உதவி ஆசிரியர் செல்வி. லோறேனும்






வெலஸ்லி & பார்ளிமென்றில் தமிழ் கற்கும் கீழ்பிரிவு மாணவர்களுடன் ஆசிரியர் திருமதி. மேனகா அம்பிகைபாகன்





வெலஸ்லி & பார்ளிமென்றில் தமிழ் கற்கும் கீழ்பிரிவு மாணவர்களுடன் ஆசிரியர் பரமேஸ்வரி மௌனகுரு.




கல்லூரியில் மிருதங்கம் பயிலும் மாணவர்களுடன் ஆசிரியர் திரு. செ. சண்முகலிங்கம்



வீணை பயிலும் மாணவர்களுடன் ஆசிரியர் திருமதி. சாந்தி சிவபாலன்



அன்பளிப்பு
ஆச்சிப்பிள்ளை



தையல் பயிற்சி பெறுபவர்களும் ஆசிரியர் திருமதி. கு. மாணிக்கவாசகரும்



தமிழ்மொழி கீழ்ப்பிரிவு மாணவர்களுடன் ஆசிரியர்கள் திருமதி. பிரியதர்சினி அன்ரன், ரேணுகா கரிகரன், சிவசோதி தெய்வேந்திரம்.



தமிழ்மொழி மத்தியபிரிவு மாணவர்களுடன் ஆசிரியர் சுகந்தி பாலஸ்கந்தா


# கல்லூரியில் சேவையாற்றும் தொண்டர்கள்

இராசரத்தினம் சுப்பிரமணியம்
ஞானேஸ்வரன் சீனிவாசகம்
சந்நிதிவேல் செல்வத்துரை
இராஜ்குமார் சோமநாதன்
நாகேந்திரன் சடையர்
விஜயலக்சுமி சீனிவாசகம்
பிரேமாவதி சிறீஸ்கந்தராஜா
துஷியந்தி பாலமோகன்
அலெஸ்க்சாந்தர் மனுவேற்பிள்ளை
கிரிதரன் சச்சிதானந்தன்
கணநாதன் ஆறுமுகம்
கந்தசாமி வல்லிபுரம்
பவானி இராசரத்தினம்
றூபி கங்காதரன்
யோகநாதன் பாலசிங்கம்
துஸ்யந் ஞானப்பிரகாசம்
ஐறீன் கோபன்
கிரிஜா பாலகுமார்
கிருபாநிதி இரத்தினேஸ்வரன்
நிரோதினி பரராஜசிங்கம்
பிரபாலினி குணரட்ணம்
சண்முகலிங்கம் செல்வநாயகம்
சாந்தினி சிவபாலன்
மகேஸ்வரி கனகலிங்கம்
பத்மசோதி உலகநாதன்
சரஸ்வதி சின்னத்தம்பி
தவமலர் சிவானந்தன்
சிறீதர் பரம்சோதி
சுந்தரதாஸ் வேலுப்பிள்ளை
தியாகேஸ்வரி மகேந்திரன்
விவேகி விக்னேஸ்வரன்
தாஸ் அருணாசலம்
அந்தோனிப்பிள்ளை அன்ரன்
பெனடிக்ற் பேதுறுப்பிள்ளை
சந்திரிக்கா சுதேந்திரன்
கௌரி கனகரட்ணம்
ஜெயமணி சிவராம்
ஜோதி கெங்காமூர்த்தி
கமலினி அருட்சோதி
சுலோசனா லோகேந்திரன்
மனோன்மணி தனபாலசிங்கம்
மேனகா அம்பிகைபாகன்
பரமேஸ்வரி மௌனகுரு
பட்டன் அழகர்சாமி
பொன்மலர் திருஞானம்
புஸ்பமலர் கிருபைரட்ணம்
பிரியதர்சினி அன்ரன்
இராஜேஸ்வரி சிவலோகநாதன்
இரஞ்சிதமலர் சிறீஜெயலிங்கம்
இரட்ணசெவ்வந்தி ஜெயகாந்தன்
ரேணுகா கரிகரன்
சைராபானு யோகானந்தசாமி
சரோஜா சண்முகம்
சரோஜினி வேலாயுதம்பிள்ளை
சத்தியவதி வெற்றிவேற்பிள்ளை
செபரட்ணம் கனகரட்ணம்
சிவபாக்கியவதி பேரம்பலம்
சிவசோதி தெய்வேந்திரம்
சோபனா லோரன்ஸ்
சுகந்தி பாலஸ்கந்தா
தேவரஞ்சிதமலர் பாலகிருஸ்ணன்
விஜயலக்சுமி பூபாலசிங்கம்
விவேகானந்தன் பொன்னையா
அல்போன்ஸ் சுரேந்திரன்
ஜெயகோபன் ஜெயகாந்தன்
மரியநேசன் மேரி
யுவராஜன் இராஜசுந்தரம்
திருநாவுக்கரசு கந்தசாமி
கிருஸ்ணமூர்த்தி இரட்ணசபாபதி
குலமுருகன் குலசேகரம்
குலேந்திரன் சிவகுரு
மோகன் இராமகிருஷ்ணன்
மகேந்திரன் திருநாவுக்கரசு
மூர்த்தி சுந்தரேஸ்வரி
செந்தில்முருகன் செந்திலிங்கம்
தாரகன் முத்துக்குமாரசுவாமி
அந்தோனி அரியராஜா
ஜோய் சாந்திக்குமார்
வரதன் துரைசிங்கம்
கணேசதாசன் ஈஸ்வரம்பிள்ளை
லொறேன் சாந்திக்குமார்
லோகி மரியதாசன்
குகவதி மாணிக்கவாசகர்

அன்பளிப்பு
டராசா ஆச்சிரிப்பிள்ளை
அன்பளிப்பாக வழங்கப்பட்டது



மின்கணனி வகுப்பில் (**Office Assistant Certificate Program**) பயிற்சி பெறும் மாணவர்களுடன் ஆசிரியர் திரு. செ. சந்நிதிவேல், ஆசிரியர் திருமதி. ரூபி கங்காதரன், திரு. சு. இராசரத்தினம்.



இவ்வகுப்புக்களில் பயிற்சியினை முடித்துக் கொண்ட பலரும் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எமது நினைவுகள்

எமது கல்லூரியின் ஆறாவது ஆண்டுவிழாவினைக் கொண்டாடும் இவ்வேளையில், அதனுடைய வளர்ச்சி குறித்து மிக்க மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறோம். இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து பலவிதமான உதவிகளையும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பினையும் நல்கிய பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள, தொண்டர்கள் மற்றும் சக அமைப்பு உறுப்பினர் யாவருக்கும் எமது நன்றியினைக் கல்லூரியின் சார்பில் தெரிவிக்கின்றேன்.

எமது கல்லூரி கனடாவில் வாழ்கின்ற தமிழ் இளஞ் சிறார்களுக்குத் தமிழ்மொழி, தமிழ்க்கலை, பண்பாடு, வரலாறு போன்றவற்றைப் போதிப்பதில் எடுத்துள்ள முயற்சி அமோக ஆதரவைப் பெற்று வருவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள், தமது குழந்தைகள் தமிழ்மொழியினைப் பயிலவும் எங்கள் கலாச்சார விழுமியங்களைப் பேணி வளர்க்கவும் எடுத்துக்கொண்டுள்ள முயற்சியும் ஆர்வமும் பாராட்டத்தக்கவை. அது மாத்திரமன்றித் தமிழ் மொழியினை விசேட சித்திப் பாடமாகப் பல்கலைக்கழக மாணவர்கள் பயின்று வருவது எமது இளம் சந்ததியினர் எமது மொழி, பண்பாடு, இலக்கியம், வரலாறு போன்றவற்றில் காட்டும் ஆர்வத்தை நன்கு பிரதிபலிக்கின்றது. அவர்கள் நடத்தும் பட்டிமன்றம், நாடகம், கலை நிகழ்ச்சிகள் என்பன இதற்குச் சான்று பகர்க்கின்றன.

நாம் பிறந்க மண்ணில் எமது உரிமைகளை இழந்து இரண்டாந்தரப் பிரசைகளாக வாழ்வதை விட எமது உரிமைகளுக்காகப் போராடி எமது தாயக சுயநிர்ணய விடிவிற்காகத் தமது உயிரினைத் தியாகம் செய்யும் மக்களின் வீரம், துணிவு என்பனவற்றைப் புறநானூற்றில் காட்டியது போல் எமது சிறார்கள் தமிழீழப் போராட்டத்தை நாட்டிய, நாடகம் கவிதா நிகழ்வு பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் இங்கே வாழுகின்ற தமிழ் மக்களின் ஆதரவையும் ஆர்வத்தையும் தட்டியெழுப்பிப் புதிய சகாப்தம் ஒன்றினைப் படைத்துத் தாய் நாட்டுக்கு வெளியிலும் தமது கலைத்திறன் மூலமாக நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் சித்தரித்துக்காட்டிய எமது கல்லூரிக் கவின்கலை மாணவாகளை மனமாரப் பாராட்டுகிறோம்.

கல்வி, தொழில்நுட்பம், கணனி ஆகிய துறைகளில் எமது மக்கள் போதிய திறன் பெற்று தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன் தாயகத்தில் தொழில் நுட்பம், தொழில்வளம் பெருக்கல் ஆகியவற்றில் ஈடுபடச் செய்யும் பொருட்டு எமது தலைமைப்பீடம் எடுத்த முயற்சி இன்று நன்கு பரிணமித்து உற்சாகமும் வளர்ச்சியும் பெற்று வருகிறது.

எமது கலாச்சார விழுமியங்களைப் பேணி வளர்க்கும் நோக்கத்துடனும் தொழில் நுட்பம், விஞ்ஞானம், கணனி போன்ற துறைகளில் முக்கிய கவனம் செலுத்தி எமது மாணவர் நலன் கருதி எமக்கென ஒரு கல்லூரியை நிறுவும் பணியில் எமது அமைப்பு கல்லூரியும் ஒன்றிணைந்து செயலாற்றி வருவது மிக்க மகிழ்ச்சியூட்டும் செயலாகும்.

வாழ்க தமிழினம்! வளர்க தமிழீழம்!

ச. நாகேந்திரன்
இணைப்பாளர்

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.



எமது கல்லூரியில் இம்மாதம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட **(Quality Assurance)** தர உறுதிப்பாட்டு வகுப்புகளில் பயிற்சி பெறும் மாணவர்களும் ஆசிரியர் திரு. கணேசதாசன் ஈஸ்வரம்பிள்ளை அவர்களும். இப்பயிற்சி வகுப்பில் சித்தியடைவோர் இலகுவில் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளவும், உயர்பதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

| | |
|---|---|
| • Internet | * Lotus |
| • Visual Basic | * Office Assistant Cert. |
| • Key Boarding | * Data Entry |
| • Accpac | * CATS |
| • Excel | * Unix |
| • Word Perfect | * dBase |
| • MS Access | * Java |
| • C++ | * Windows NT |
| • Visual Adv | |
| • HTML | |
| • Dos | |
| • Windows | |
| • C Lang (Adv) | |

*மின் கணனித்துறை*
*ஆரம்பமுதல் தொழில்*
*புரிவோர் வரை*
*பயிலக்கூடிய சகல*
*வகுப்புக்களும்*
*நடைபெறுகின்றன.*

Air Canada

Canadian

AIR LANKA

DELTA AIR LINES

CATHAY PACIFIC

# GENERAL TOURS & TRAVEL

(Queen Street) Inc.

swissair

SINGAPORE AIRLINES

USAIR

KLM

அனுபவம், திறமை மிகுந்த ஊழியர்கள் மூலம் ஜெனரல் டுவர்ஸ் எல்லா சேவைகள், சாட்டர் சேவைகளில் பயணங்களை அளிக்கிறது. இலங்கை, இந்தியா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சலாந்து, நோர்வே, பாங்கொக், சிங்கப்பூர், மற்றும் லண்டனுக்கு விசேட கட்டணத்தில் பயண ஏற்பாடு. புளோரிடா, கலிபோர்னியா, கரிபியன் நாடுகளுக்கு விசேட பயண ஏற்பாடுகள். உங்கள் கார் வாடகை, ஹோட்டல் பதிவுகள், விமான காப்புறுதிகள் போன்றவற்றை நாம் கையாள்வோம். உங்கள் பிரயாணத் தேவைகளை மொன்றியல் தலைமையகம், ஒட்டாவா, வினிபெக் கிளைகள் உட்பட ஜெனரல் டுவர்ஸ் அலுவலகங்கள் பூர்த்தி செய்யும்.

உங்கள் அனைத்து விமானப் பதிவுகளுக்கும் தொடர்புகொள்ளுங்கள்

**Tel: (416) 363-5555**
**Fax: (416) 363-3488**
55 Queen Street East
Concourse Level
Toronto (Downtown) ON

**Tel: (416) 755-8500**
**Fax: (416) 755-5552**
2155 Lawrence Ave. East,
Suite 11, Scarborough, ON



# போராட்டம் கல்விக்கு கவசம்
# கல்வி போராட்டத்திற்கு காப்பரண்

அன்றொரு காலம் நாம் அமைதி வழியில் உரிமை கேட்டோம். இன்று நாம் இரத்தம் சிந்திப் போராட வேண்டியிருக்கின்றது. உயிர்ப்பலி கொடுத்து உயிர் வாழ வேண்டியிருக்கின்றது.

போராடுவதற்கு போராளிகள் வேண்டும். எதிரியுடன் போர் நடத்த ஒரு படை வேண்டும். இந்த விடுதலைப்படை இல்லாது போனால் எமது இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்த முடியாது. இந்தப் போராளிகள், இந்த இளம்புலி வீரர்களை, நாம் எமது மக்கள் சமுதாயத்திலிருந்தே அணி திரட்ட வேண்டியுள்ளது. நாம் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பதில்லை. இது ஒரு தேசிய விடுதலைப்போர் என்பதால் சுய விருப்பிலேயே இளம் போராளிகள் எமது இயக்கத்தில் இணைந்து கொள்கின்றார்கள். தமது சுயத்தைத் துறந்து, தமது சொந்த வாழ்வின் சுகபோகங்களைத் துறந்து, பந்தத்தின் பற்றுறவுகளைத் துறந்து, தமது மண்ணையும், மக்களையும் நேசிக்கும் விடுதலைப் பற்றாளர்கள் எம்முடன் இணைகிறார்கள். இந்தப் போராளிகளின் இலட்சிய வாழ்க்கையையும், அர்ப்பணிப்பையும் நாம் போற்றவேண்டும், கௌரவிக்க வேண்டும்.



தாயக விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டும் எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும், கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பது போல, கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்க வேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்து கொள்ளும் வகையில் மாணவ சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசிய கடமைப்பாடாகும்.

எமது இயக்கம் விடுதலைப்போரை முன்னெடுத்து வரும் அதேவேளை கல்வித்துறையின் மேம்பாட்டிற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கான அமைப்புக்களையும் கட்டியெழுப்பி வருகின்றது.

**- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்**

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் சித்தி எய்திய மாணவர்களைப் பாராட்டி, தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் 13.02.1993 இல் வெளியிட்ட அறிக்கையிலிருந்து.